584

Registered No. M. 1500. "NAVASAKTI"

நவசக்தி

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கரு 1933ஆ ஏப்ரல்மீ பரல் ௬

18 MAY 1933

உள்ளுறை

	பக்கம்
பூகோள விலாசம்	௨௯௯
சமரச சன்மார்க்க போதம்	௩௦௩
நமது சிந்தனை	௩௦௪
இந்தியப் பொருளாதாரம்	௩௧௨
அறிவியலும் சமயமும் - இவற்றின்	
தற்கால நிலை	௩௧௮
சுந்தர கவிவாசகம்	௩௨௨
உடல் நுட்பம்	௩௨௪
இடியேறு	௩௩௦

வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0. வெளிநாடு ரூபா 4.

பாம்பன் :

ஸ்ரீமத்-குமாரகுருதாச சுவாமிகள்

இயற்றிய நூல்கள்

	ரூ.	அ.
சிவஞானதீபம் 2-ஆம் பதிப்பு	0	8
ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும் குருசிட சம்பவ வரலாற்று வியாசமும் 1-ஆம் பதிப்பு.	1	0
வேதவியாசம்	0	10
சிவயாதனவியாச மூலமு முரையும் 2-ஆம் பதிப்பு.	0	11
பத்துப் பிரபந்தம்	0	7
தகராலய ரகசியமும், உரையாகிய சதானந்த சாகரமும்	2	8
பரிபூரணானந்த போதமும் உரையாகிய சிவசூரியப் பிரகாசமும்	2	0
சத்தாத்வைத நிர்ணயம்	0	3
திருப்பாவும், உரையாகிய திட்பமும், குறிப்புரையும்	10	0
ஸ்ரீமத் குமாரசுவாமியம்	5	0
செக்கர்வேள் செம்மாப்பும், செக்கர்வே ளிறுமாப்பும்	0	6
சிறுநூற்றிரட்டு 6-ஆம் பதிப்பு	0	6
குமரவேள் பதிற்றுப்பத் தந்தாதி 3-ஆம் பதிப்பு	0	2
குமாரகுருதாச சுவாமிகள் பாடல் திருவலங்கற்றிரட்டு 1-ஆங்கண்டம் திருவலங்கற்றிரட்டு 2-ஆங் கண்டம் முதலியன அடங்கிய நூல்	3	8
அணுமதி வையம்பவென்னுஞ் சேந்தன் செந்தமிழ்	0	2
சண்முக சகச்சிரநாமார்ச்சனை	0	4
செவியறிவுறூஉ	0	1½
ஷெ காலிகோ பைண்டு	0	2½
பாம்பன் : ஸ்ரீமத் - குமாரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	0	8
ஷெ சரித்திரம் காலிகோ	0	12

ஜோதிட நூல்கள்

	ரூ.	அ.
சர்வ சோதிட சஞ்சீவி ...	1	8
சிற்பநூற் பொக்கிஷம் ...	1	0
சோதிட பாரா சாரியம் ...	0	12
உடுதசாபிரதீபிகை	0	12
வீமேசுர உள்ள முடையான் 2-ம் பாகம்	1	0
வான சேகர சந்தகேசவ தீபம் ...	2	0
சோதிடக் கன்ம காண்ட மூலமும் உரையும்	0	6
ஜோதிட அரிசியன் 1, 2, 3, 4 பாகங்கள் ரவித்தனி ...	1	0
அந்தா பலன் ...	1	0

வைத்திய நூல்கள்

	ரூ.	அ.
புலஸ்தியர் கற்பம் 300 ...	1	0
அகஸ்தியர் பன்னிருகாண்ட வைத்தியம் 200	0	12
அகஸ்தியர் அமுத கலைக்கியானம்	1	4
அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 360	0	12
இராம தேவரென்ற யாகோபு சுண்ண சூஸ்திரம் 155 ...	0	12
,, லோகச் செந்தூரம் 300-க்கு சூஸ்திரம் 150 ..	0	10
,, லோகச் செந்தூரம் 300 ...	0	12
,, பஞ்ச மித்திரம் 300 ...	0	14
,, வாத வைத்தியம் 300 ...	0	14
,, வாத சூஸ்திரம் 400 ...	1	4
,, தண்டகம் 100 ...	0	12
,, வைத்திய சூஸ்திரம் 150	0	10
,, வைத்தியம் 300 (மருந்து சத்தியம் நாடி விவரமும்)	0	14
,, சுண்ணம் 600 ...	1	8
,, வைத்திய சிந்தாமணி 700	1	8
,, வைத்திய கல்லாடம் ...	1	4
,, சுண்ணம் 300 ...	0	14
சித்த வைத்திய அகராதி ...	2	8
திருவள்ளுவர் பஞ்சரத்தினம் ...	2	0
பதினெண் சித்தர்கள் வைத்திய வாதயோக ஞான சாஸ்திரத் திரட்டு	1	8
அகஸ்திய முனிவர் பூரண சூஸ்திரம்	0	12
இராம தேவர் சிவயோகம் ...	0	8
அகஸ்திய முனிவர் கற்பமுப்புக் குரு நூல் 100-ம் மனோன்மணி திட்சை 100-ம்	0	12
கருவூரார் வாதகாவியம் 700 ...	1	0
சட்டை முனிவர் ஞானம் ...	0	4
அகஸ்தியர் வைத்திய பூரணம் 205	0	12
நந்தீஸ்வரர் நிகண்டு	0	12
விஷ வைத்திய யாந்திரீக ஒன்பது விஷ ஆருடம்	2	8
அகஸ்தியர் இரண வைத்தியம் 134 மூலிகைகள்	0	12
அகஸ்தியர் நயனவிதி 1500 உரை நாகமுனிவர் 200	1	4

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்ன

நவசக்தி

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கஉ ஸ்ரீமுக௵ சித்திரை௴ பரல் ௬

பூகோள விலாசம்

ரா. ராமானுஜம்
செப்பனிடுபவர் பெயர்

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நாள். பிப்ரவரி 93

செப்பனிட்டு முடித்த நாள் பிப்ரவரி 93

பார்க்கும்
மு. பா. எ.
கையொப்பம்.

ஆராய்ச்சி
உதவியாளர்
கையொப்பம்.

19/2/93

...மைவருத்தங்
...து—கொண்டவழல்
...னே யுழுததனை
...ாலவிலை
...டன்
...மிஞ்சுஞ்
...மிலை வையந்தாம்
...மூகாருந்
...ம்ம தன்பின்
...—டாகவைந்தாம்
...சிங்கம்
...ம்—பின்கீழும்
...வைந்தாம்
[illegible]
மதிக்கிரகங் கும்பீர மானக்கி ராக்ய
மிதுவுமைந்து மற்றிதன்கீ ழேயும்—புதியதொரு
கட்டாவங் கூர்மங் கருங்காகங் கூகைகழு
கிட்டமுட னைந்தா மிதன்கீழ—மட்டைபுலி
காட்டுக் கவிகடகங் கண்டகமிவ் வைந்திதன்கீழ்
நாட்டுகின்ற சீயிரத்தம் நற்பூதி—வாட்டுகின்ற
தூம மிருத்திகையுஞ் சொன்னவிவை யைந்திதன்கீழ்
ஆமப் புழுவு மமேத்தியமுந்—தாமும்
பிரதிகா மற்றிதற்குப் பின்னுவண்ணீர்த் தான
வருவாய்நீர்ச் சிவனைமைர் தாருந்—தருபிதன்கீழ்
தன்னைத்தான் றின்னல் தருபிரத்தந் தான்குடித்தல்
சென்னியினில் மூளையினைத் தின்ன லுடன்—பின்னுமொரு
தாருணமுஞ் சங்குடமுந் தானைந்தா மிங்கிதன்கீழ்
மேருநிகர் பூதமுடன் வித்தாமும்—பேர்விடதி
மாறு நெருப்பு வரையொடுதா னிவ்வைந்தா
மீறு மிதன்கீ ழிருப்பழவு—மீறுத
வைதரணி காலவன மற்றேக பாதமுட
னெய்யாத பூரணமிவ் வைந்திதன்கீழ்—மெய்யான

கோரந் திற[ற்]செக்குக் கூறு மியந்திரமும்
பாரக் கருப்பாலைப் பாசமைந்தாம்—நேருமிதன்
கிழா மருத்தனம்பின் கேழ்பெரிய சுல்லியொடு
சூழ்சிறிய சுல்லி சுடர்ப்பாறை—நீளு
மிருப்புமய மீதைந்தா மிங்கிதன்றன் கீழே
பொருப்புயர மப்பொருப்பும் பொங்கக்—கருப்புமொழி
முத்தே குராதார மூத்ரமலக் கூபமைந்தாஞ்
சுத்தவிதன் கீழிருள்பின் சூழெரிவாய்க்—குத்து
முரலுலக்கை யம்மி யுடனிவையைந் தாங்கீழ்
அரியசிலை வண்டி லயக்கலப்பைக்—கரியநிறத்
தாலவனஞ் சம்மோகந் தான்மசக மண்டபமு
மேலுமிவை யைந்தா மிதன்கீழுங்—கோலமுள்ள
மத்திபங்கந் தீச்சூல மற்று மிருப்புருண்டை
துய்த்தல் பலதுயரஞ் சூழ்துயர—மித்தொகையு
மோரஞ்சா முற்றிதன்கீ ழோங்குங் கசுமலம்பின்
ஞருஞ் சமலசல மாலகலம்—பேரால்
மெதவிருபம் பிக்கிரக மேயோரைந் தாங்கீட்
சிதைவிலிய மர்னும்பின் றேனே—முதலேக
பாதந் திரிபாதம் பற்கொடிய தீவிரம்பின்
ஞேது மவீசியிவை யோரைந்தா—மாதரசே
சொல்லிவந்த ராசத் தொகையுமெழு பானிரட்டி
மெல்லியகீழ்த் தட்டினின்று மேலளவும்—நல்லமுப்பான்
கோடியின்மே லிலக்கங் கொண்டிருக்கும் யோசனையாம்
நீடுமிதன் மேல்வெளியில் நீட்சியுங்கேள்—கூடுமுப்ப

கூர்மாண்ட ருத்திரர்

தாயிரமாம் யோசனையா மங்கதன்மேற் கூர்மாண்ட
நாயகனுர் தானிருக்கும் நன்னகர—மீயுயரங்
கோடித் தொகையிற் குறையுமே யோரிலக்க
மீடிலது மூன்றுகண்ட மாயிருக்கும்—நீடுமிதன்
மத்தி கனகமொளிர் மண்டபத்திற் கூர்மாண்டர்
மித்திரனைப் போலெரிக்கு மெய்யினரா—மெத்திசையுங்
கண்டோர் பயப்படமைக் காரிநிறம் போல்முகமுந்
துண்டப் பிறையெயிறுந் தோணுன்குங்—கொண்ட
மழுவம்பு வில்பரிசை வாய்த்தகரத் தேந்தி
விழியுமொரு மூன்றுவட்ட மென்ன—வழகாகுந்
தம்போலும் ருத்ரர் சதகோடி சூழ்ந்திருக்கக்
கும்பமுலைத் தேவமின்னுர் கொண்டேத்த—வெம்புங்
களித்திருக்கும் பூத கணமயுத கோடி
மனத்தினிதாய் நின்று வணங்க—நினைத்தற்
கரியநிரை யங்கட் கதிபராய்ச் சோதி
விரியுமரி யாசனத்து மேவும்—புரியதற்கு
மீதுநவ லக்கம் வெளியாமி யோசனைமேற்
பூதராக்க ளெட்டும் பொருவிலதாய்—மாதிரத்தின்
அட்டகயந் தாங்கு மதலமுத லேழுலகின்
திட்டமுமே சொல்லக்கேள் சேயிழையே—வட்டமுள்ள

அதல லோகம்

பாதாள மாமதலம் பத்திலக்க மேலுயர
மாதேகேள் மூன்றுகண்ட மாய்வதியுங்—கோதிலாப்
105 பொற்பிரபை யால்விளங்கும் போகிசத கோடிசுற்ற
நற்புகழ்சே ருங்குளிக ராசேந்த்ரன்—சொற்பெரிய்
கண்டமொரு மூன்றுநடுக் கண்டமதி லேசோதி
கொண்டவரி யாசனத்திற் கூர்ந்திருப்பன்—விண்டதொரு
கீட்டிசையிற் கண்டமதிற் கீர்த்தியுள்ள சங்குமுடி
சூட்டுஞ் சுருதியெனுந் தொல்சுரர்—கூட்டமுடன்
வீற்றிருப்பர் பச்சிமமா மேற்றிசையிற் கண்டமதின்
மாற்றலர்க ளஞ்சும் வலியினனுக்—கூற்றுநிகர்
மெய்யா னிருதருக்கு வேந்த னுலோகிதனு
மையார் நிருதருட னேவதிவன்—றய்யவிதின்

விதல லோகம்

110 மேல்வெளியு மோரயுதம் யோசனையின் மேல்விதல
மேலுயரம் பத்திலக்க மேயாகும்—சாலப்
பதுமரா கத்தொளியாற் பாறுமிருளக்த
விதமுமுக் கண்டமாய் மேவுங்—கதமுடைய
வாசுகிமுக் கண்டமதின் மத்தியினில் மாநாகர்
தாசரெனச் சூழத் தரித்திருப்பன்—பேசுங்கீழ்ச்
சொற்பிரக லாதனெனத் தோன்றுமசு ரேசனுமேற்
கிற்பெரிய கண்டத் தியமனொனு—மற்புயனுஞ்
சேனைத் தலைவர் திரண்டுபுடை சூழமக
வானைப் பொருவ வதிந்திடுவர்—தேனைநிகர்
115 சொல்லா யிதன்மீது சுத்தவெளி யோரயுத
மல்லா விதன்மே லணிநிதலங்—கல்லாரு

நிதல லோகம்

மிந்திரநீ லத்தா லிலங்குமொரு பத்திலக்க
முந்து முயரமது முக்கூறும்—வந்தநடுக்
கம்பலனென் றேபுரக காவலனுந் தானிருப்பன்
சொம்பாங்கீழ்க் கண்டஞ் சுசுபால—னும்பர்புகழ்
மேற்கு விகடனுமே வீற்றிருப்ப ரிங்கிதன்மேற்
போர்க்கும் வெளியயுதம் போந்ததன்மே—லார்க்குஞ்

சுதல லோகம்

சுதலதலம் பத்திலக்கஞ் சொற்புருட ராக
முதையனென வேபிரபை யோங்கு—மிதுவுமொரு
120 மூன்றுகண்ட மாயிருக்கு மொய்குழலே மத்தியினிற்
கான்ற விடவெயிற்றுக் கார்க்கோடன்—றேன்றுமரி
யாசனத்தில் வீற்றிருப்ப னங்கதற்குக் கீழ்க்கூற்றிற்
காசாருங் கண்டமதிற் கற்கந்தன்—றேசார்
கராளனெனும் வல்லரக்கன் கண்டமதின் மேல்பால்
அராவிடம்போல் வீற்றிருப்ப னங்கு—பாராவுமிதற்

மகாதல லோகம்

கோரயுத மேல்வெளி யுன்னதமா மத்திதன்மேற்
சேரு மகாதலமாந் தேன்மொழியீர்—நேருமது
வெள்ளிநிற மாமதனின் மேலுயரம் பத்திலக்க
முள்ளகண்ட மூன்றாகு முண்மையே—விள்ளும்
நடுக்கூற்றிற் காரளங்க நாக மிருக்கு
மடுக்குங்கீழ்க் கூற்றி னயினவே—லெடுக்கும்
பிரனரக்க னென்னும் பிலத்தவசு ரேந்த்ரன்
சுராருக் கதிபன் றகிக்க—வரசுரிமை
செய்திருப்பன் வல்லரக்கர் சேனையொடு மேல்பாகம்
வைகிடுவன் வீமனெனும் வாளரக்கன்—மொய்குழலீர்
இங்கிதனின் மேல்வெளியில் யோசனையு மோரயுதம்
நங்கா யதன்மேல் ரசாதலமாம்—மங்காத

ரசாதலலோகம்

முத்தி னொளியான் முழுதும் விளங்கியிடு
மொத்ததலம் பத்திலக்க யோசனையா—மத்தலமுங்
கூறுமொரு மூன்றாகக் கூறுநடுக் கூறதனி
னாறுவிடத் தூற்றெரிச னுற்றிருப்பன்—மாறுங்
குணபாற்ப்ர கற்பனுமேற் கூற்றி னிருகாத
னிணையோரும் வாழ்ந்திருப்ப ரென்று—மணமாகு

பாதாள லோகம்

மின்னதல மேலே யிடைவெளியு மோரயுதம்
பன்னும்தன் மீதிருக்கும் பாதாளம்—இன்னும்
நவமணியிற் சோதியெந்த நாளும் விளங்கு
மவையுயரம் பத்திலக்க மாகும்—பவமகற்றும்
அன்னதுவு மூன்றுகண்ட மாயிருக்கு மங்கதனின்
மன்னுநடுக் கண்டமொளிர் மண்டபத்திற்—பொன்னமருஞ்
சிங்கா தனமதனிற் செம்பொன் முடிதிகழ
மங்காத வாளெயிற்று மாநாக—ரெங்கும்
புடைசூழ்ந்து பாதமலர் போற்றிநிற்கப் பின்னும்
பிடிநடையுஞ் சிற்றிடையும் பெற்று—விடமருவு
கண்ணிணையி னார்நாக கன்னியர்க ளெட்டிலக்கம்
பண்ணமரும் பாடல் பயின்றேத்தத்—தண்ணளியால்
ஐந்தருவு மேவல்செய்ய வாடரவத் தக்ககனுஞ்
சந்ததமு நித்தியனுய்த் தானிருப்பன்—பிந்தவதன்
கீணிலையின் மாபெலியுங் கீண்டகுட பாகமதில்
தாமணைய பிங்கலனுந் தானிருப்பர்—காணிதன்மேற்
பத்திலக்க வோரயுதம் பாழ்வெளியா மவ்வெளிமேல்
வைத்தநவ லக்கமுயர் வாம்பதியாந்—சுத்தமுள்ள
பொன்னு மணியும் பொலிந்தொளிரு மன்னகரா
மின்னகரி னுயிரவி யோசனையி—னுன்னதமாம்

ஆடகருத்திரர்

மண்டபத்திற் செம்பொன் வயக்குமரி யாசனத்தி
னண்டர் முனிவ ரடிவருடக்—கொண்டவரு

மின்போற் பிரபைதரா வெண்பிறைதேர் செஞ்சடையு
முன்பாற் கறைமிடறு மூவிழியும்—நன்கான
கைகளொரு நான்குங் கதைகுலிச மான்மழுவுஞ்
செய்ய திருவடியுஞ் சேர்ந்திலங்கப்—பையரவ
145 கங்கணமுங் காதிற் கவசகுண்ட லங்கண்மின்னச்
சங்கரனு மாடகருந் தானிருப்ப—திங்கிதன்மேற்
சண்டக ராதி தரைக்கீ ணிரையமட்டுங்
கொண்டபில மொன்றுண்டங் கோதையே—கண்டவட்டம்
ஆயிரமாம் யோசனையா மன்னபில மொன்றினுக்கு
மேயதல மேழினுக்கு மேன்மையுள்ள—நாயகரும்

பூலோக வரலாறு

ஆடகா மப்பதிமே லாயிருக்கும் பூமிகனங்
கோடியி யோசனையாய்க் கொண்டிருக்கும்—நாடியிங்கு
சொன்ன வுலகனைத்துந் தொன்றுதொட் டாயிரமாஞ்
சென்னியின்மேற் றாங்கிநிற்பன் சேடேந்த்ரன்—இன்னுமிந்தப்
150 பூமியின்மேற் பூவுலகம் பூவுலகின் றன்பெருமை
தாமக் குழலணங்கே சாற்றக்கேள்—நேமியெனச்
சாகரங்க ளோரேழுந் தற்சூழுந் தீவேழி
ஞகரிக மாயிருக்கும் நாவலந்தீ—வாகுமதின்
சுற்றி னளவுத் தொகையுமொரு மூன்றிலக்கத்
துற்ற விரண்டயுத யோசனையா—மற்றுமிதன்
கீழ்மே லளவின் கெணிதவி யோசனையுந்
தாழ்விலா வோரிலக்கந் தானாகுஞ்—சூழுகின்ற
தெற்கு வடக்குத் திசையளவு மோரிலக்கம்

மகாமேரு

நிற்குமிதன் மத்தியினி னீண்மேருப்—பொற்கிரியின்
155 வித்தாரம் பூமியின்கீழ் வேர்பதி னாயிரமா
மத்தூரி னின்று மதனுயர—முத்தேகேள்
எண்பத்து நாலா யிரம்யோ சனையாகுங்
கண்பற்றுந் தாமரையின் காயினைப்போல்—விண்பற்றும்
மேலின் விரிவகலம் விள்ளிலெண்ணான் காயிரமாம்
சாலுங்கீழ்ச் சுற்றளவு தான்பாதி—வேல்விழியீர்
மேரு கிரியினுக்கு மேகலையு மூனமுங்கீழ்ச்
சாருமந்த ராளந் தருமுயரந்—தேரில்
இருபத்தய் யாயிரவி யோசனையி தின்மேல்
வருமடியின் மேகலையா மற்றும்—பொருவிலொரு
160 மூவா யிரம்யோ சனையாகு மொய்குழலீர்
ஓவாமேல் வட்டவள வோராயுத—மேவுமிதன்
மேலினந்த ராளம் விளம்பிலையஞ் சாயிரமா
மேலினடு மேகலையின் வித்தாரந்—சேலனைய
கண்ணு யுயரக் கனிதமுமே வாயிரமா
மெண்ணும் விரிவீரே ழாயிரமாம்—நண்ணியமூன்
றுமந்த ராளந் தருமுயர முன்னளவே
யாமந்த ராள மதன்மீது—தாமந்த

மேகலையு முன்மே கலையுயர மேல்விரிவு
மாகுமக லம்பதினெண் ணாயிரமா—மாக
விருமூன் றுயரமுமே யெண்பத்து நாலாய்த்
தருமா யிரயோ சனையாம்—பொருவிலா

இந்திரன்

மேல்விரிவி லாயிரத்தெண் மின்னார் சிகரமதன்
பாற்கீழ்ச் சிகரமதிற் பண்ணவர்கோன்—சேலனைய
நாட்டத் தரம்பையர்கள் நட்டமிடத் தேவருடன்
கூட்டத் திருடியர்கள் கொண்டேத்த—வாட்டமிலா
வைந்தருவுந் தேனுவுஞ்சிந் தாமணியு மன்புடனே
வந்தேவல் கேட்டு மருங்கினிற்பச்—செந்திருவாழ்
ஐம்பொனெடு வீதி யமரா பதிநகரிற்
செம்பொனெடு மண்டபத்திற் சீர்திகழப்—பைம்பொனரி
யாசனத்திற் செய்ய வயிராணி தன்னோடும்
நேசமுடன் வீற்றிருப்ப னேரிழையே—மாசிலாத்

அக்கினி

தென்கிட் டிசையிற் சிறந்ததே சோபதியின்
மின்போற் பிரபை தரு மெய்யினராய்—கன்கான
சென்னியிரண் டுள்ளவராய்ச் செஞ்சிகைய ராய்நயனஞ்
சொன்னவொரு நான்கினராய்த் தொன்மையராய்—பின்னமிலாத்
தாலமோ ரேழினராய்த் தக்கவர மேழினராய்
வால சொரூப வடிவினராய்ச்—சீலமுள்ள
பாதமொரு மூன்றினராய்ப் பன்னுமச வாகனராய்ச்
சோதிச் சுவாகி சுதாகியெனுங்—காதலியர்
பக்கத் திருப்பப் பதுமமல ராசனத்தின்
மிக்க வழற்கடவுள் வீற்றிருப்பர்—மைக்குழலீர்

எமராசன்

சொல்லரிய தென்றிசையிற் றேனுறு சிகரமதிற்
பல்வளங்கா சையமினிப் பட்டினத்தில்—அல்லிலங்கா
செய்யுஞ் சிவந்தெழுந்து மேலுயர்ந்த செஞ்சிகையுங்
கைகள்மூ வாறுங் கதைகுலிசம்—வைவேல்வில்
அம்புமழுத் தோட்டி யழற்சூலம் பாசம்வசி
வெம்புபிண்டி பாலமுங்கை வேல்முசலம்—வம்புக்
திகிரிகழு வாள்முசுண்டி செத்தோளி ரொன்பா
ணிகலுமிரு பாவிலங்க வேந்திப்—புகலுகின்ற
வெள்ளைப் பிறையெயிறும் வெவ்வழல்கா லம்பகமுங்
கொள்ளுமைக் சுத்திரத்த கோசிகமும்—விள்ளரிய
செம்மாலை செஞ்சாந்து சேர்ந்திலங்கு மார்பகமு
மைமால் பொருமயிட வாகனமுஞ்—செம்மானை
நேர்நயனக் காளகன்னி நீலியிணை மாதிரு
பாரிசமும் வைகப் பனத்கரிய—கோரமுள்ள
சண்டன்மகா சண்டனிவர் தானிருவர் வாய்புதைத்துக்
கொண்டேவல் கேட்கக் குலவரைபோற்—றண்டொருகை

யேந்திவரு மிங்கிரர்க ளெண்ணிறந்த பேர்சூழக்
காந்துகனல் கண்ணுடைய காலனெடுஞ்—சேர்ந்திருக்கு
மேலா மவமிருத்தும் வேண்டுபணி கேட்டுநிற்ப
நாலா கலையுணர்ந்து நற்கணக்கின்—மூலமெல்லாஞ்
சித்திர குத்தர் செவிப்புலத்திற் றானுரைக்கப்
பத்தியுடன் விஞ்சையர்கள் பாட்டொலிப்பச்—சித்திரக்கால்
மண்டபத்தி னுட்பண் வயங்குமரி யாசனத்திற்
சண்ட னினிதிருப்பத் தையமேல—யண்டர்புகழ்

நிருதி

தென்மேற் றிசையதனிற் சேர்கிருட்டி னுபுரியிற்
றன்மேனி சாமநிறந் தானுளதாய்—மென்மேற்
கராளமுகம் வக்ரக் கடையெயிறு மின்போன்
றராவுமிழும் வெவ்விடம்போ லாகப்—பிரேதமெனும்
வாகனமுங் கையிலொளிர் வாட்பரிசை தாங்கியொரு
பாகஞ் சுகேசினியோர் பாகமதின்—மேகநிகர்
தண்ணறும் பூங்கூந்தற் சாதாபி யம்மையுமே
விண்ணோர் மடந்தையென வீற்றிருப்ப—வெண்ணி
லியக்கர் கணங்க ளிருபுறமுஞ் சூழ
வியக்கு நிருதியங்கு மேவும்—நயக்கவரு

வருணன்

மேற்றிசையிற் பாவதியின் மேன்மகர வாகனமுஞ்
சாற்றுகின்ற பாசந் தருங்கனமுங்—கூற்றுறழும்
வேலின்விழி லாதினியு மேவு மருடணியுஞ்
சால விருபுறமுந் தானிருக்கச்—சீலமுள்ள
சிங்கா தனமதனிற் சிந்துபதி வீற்றிருப்பன்
மங்கா ததற்கு வடமேற்குச்—சிங்காரக்

வாயு

கந்தபதி யென்னுங் கடிநகரிற் சூட்சுமமாய்
வந்த சரீரன் மகாபிலத்தன்—குந்தக்
கருநிறத்தன் மான்வா கனன்றோட்டிக் கையன்
வருமயிடி யம்மையொடு மற்றுங்—திருவங்க
தாயியெனுந் தேவி யருகிருப்ப வாசனத்தில்
வாயுக் கிறைவன் மகிழ்ந்திருப்பன்—ஏயும்

சோமன்

வடதிசையிற் கீர்த்திமதி மாநகரிற் சோதி
விடுமரியி னாசனத்தின் மீது—மடவா
ரிரித்தி நிவிர்த்தி யிசைந்திருப்பச் சோமன்
றரித்திருப்பன் வெண்மைச் சடலன்—தெரித்தவட

ஈசானிய மூர்த்தி

கீழி னெசோவதியிற் கீண்டமதிச் செஞ்சடையுஞ்
சூழுங் கொடுவரியின் றோலுடையும்—ஏழுலகும

வந்தனைசெய் பொன்னின் மலரி னடியிணையுந்
சுந்தரஞ்சேர் மூன்றுகண் ணுந் தோனுன்ற—மந்தமுள்ள
மூரிக் கொடியு முழுநீற்றின் மெய்யொளியுங்
காரைக் கறுவு களத்தெழி லும்—பாரிக்குங்
கொங்கைச் சுருபினியுஞ் சுறிரச தாயியினை
மங்கையிரு பானு மகிழ்ந்திருப்பச்—சங்கரனே
205 ரீசான மூர்த்தி யெழுந்தருளி யேயிருப்பர்

அட்டதிக்கினிடையின் சரித்திரம்

தேசாருந் தேவநகர்த் தென்றிசையிற்—காசாருங்
காமவதி யென்னுங் கடிநகரிற் காமுகிநற்
றுமக் குழற்பூ சனிசுமுகி—நாமமினி
ருருவசி தான்முகிதி லோத்தமைமலம் பானியொளிர்
தாரமர்கூந் தற்கிறு தாசனியும்—காரியர்க
ளின்னோர் முதலாயெண் ணெண்கோடி வானவர்தம்
மின்னார்கள் மின்போல வீற்றிருப்பர்—பின்னனவின்
மேற்கினிவி ரேவதியா மேன்மையுள்ள மாநகரி
லாற்கும் விசுவகன்மா வங்குறைவன்—தீற்கமுவ
210 சண்ட னைநபதிக்குத் தானடுத்த மேற்றிசையி
லண்டர்நகர் நேர்திருந்த தாபுரியின்—கெண்டைவிழி
மாயே சொரிபிரமி வாராகி யிந்த்ராணி
தாயாங் கவுமாரீ சாமுண்டி—வீயா
வயிணவியில் வேழ்மாதர் வைவச் சுதன்றன்
நயனமணி போலவங்கு நண்ணும்—வியனகர்க்கும்
பச்சிமத்தி லுற்ற பதியாஞ் சிரோசிதையின்
மெச்சு முருத்திரர்கள் வீற்றிருப்பர்—இச்சிகரம்
மேல்பாற் குணபதியின் மேதியூ ரந்தகன்றன்
பாலேவற் சத்திகடாம் பாங்காகச்—சூல்மேகம்
215 போலவொளி மெய்யினராய்ப் பொங்கழலார் முத்தலைய
சூலமுறை ங்கயினராய்ச் சூழ்ந்திருப்பர்—மேலுமொரு
பிங்கலையாம் பொற்பதியிற் பேசு சிவோத்தமருஞ்
சங்கரர்க பாலீசர் தாமுருத்ரர்—செங்கைமழு
வீமரி சானர் விசையபய வோற்பவர்பின்
னைம மகாதேவர் நற்கடுக்கைத்—தாமமுள
நீல வுலோகிதர்தன் னேர்தேவ தேவரெனுஞ்
சால வுருத்திரர்க ளாமிருப்பர்—சீல
நிருதிதிசைக் குத்திரத்தி னேர்கிருட்ணை தன்னில்
வருமலகைக் கூட்டமுடன் வாழும்—புரியின்
220 வடதிசையிற் கைமையெனு மாநகரின் மித்ரக்
கடவுளர்கள் வீற்றிருப்பர் கண்டாய்—விடவடக்குச்
சித்த வதியிற் சிறந்தனித்தி யாதாராஞ்
சித்த புரிவடபாற் சேர்ந்திருக்கு—மத்திலுறை
கின்னரராம் வாயுக் கிளக்கிற்காந் தாரிபுரி
மன்னுமதிற் காந்திருவன் வாழ்ந்திருப்பன்—அன்னவன்றன்

(தொடரும்)

சமரச சன்மார்க்க போதம்

(தொடர்ச்சி)

99. பல துறைகளுள்ளும் அரசியற்றுறை சீர்திருத்தம் பெறுதல் அவசியம். அதன் சீர்திருத்தம் பிறவற்றை எளிதில் ஒழுங்கு செய்யும். ஆனாலும் அச்சீர்திருத்தம் எளிதில் கைகூடப் பிறதுறைகளுஞ் சீர்திருத்தம் பெறுதல் நல்லது.

100. சாதி மதம் நிறம் மொழி நாடு முதலிய பித்துக்களால் எழும் வெறி, சன்மார்க்க வளர்ச்சிக்கு இழைக்கும் தீங்குகள் மேலே சுருங்கச் சொல்லப்பட்டன. அப்பித்தவெறி வாழ்வினின்றும் அகலுதல் வேண்டும்.

101. சாதிமத நிறம் முதலிய வேற்றுமைகளைக் களைதற்குரிய சீர்திருத்த முறைகளைப் பலபடக் கூறலாம். இங்கே பொருந்திய ஒன்று குறித்தல் சிறப்பு. அது கலப்புமணம் என்பது.

102. கலப்பு மணம் இயற்கையின்பாற்பட்டது. அது பலதிற வேற்றுமைகளைக் களையவல்லது.

103. மக்கள் அனைவரும் இயற்கையில் சமரச சன்மார்க்கத்தில் ஒருமைப்பட்டவர். அவ்வொருமைப் பாட்டை மக்கள் உணர்ந்து நடக்கின்றார்களில்லை. அவ்வொருமையுணர்வை சாதிமத நிறம் முதலியன மறைக்கின்றன. இந்நாளில் மக்கள் ஒருவரோடொருவர் உறவு கொண்டு வாழ்தற்குரிய சாதனங்கள் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. இஃது இயற்கை அன்னையின் கருணையேயாகும். இக்காலத்தில் கலப்புமணம் சமரச சன்மார்க்க ஒருமையுணர்வை எழுப்புதற்கும் பெருந்துணை செய்வதாகும்.

104. சடங்குகளும், சம்பிரதாயங்களும், கண்மூடி வழக்க ஒழுக்கங்களும், இன்ன பிறவும் சன்மார்க்க வளர்ச்சிக்குத் தடை செய்கின்றன. இத்தடைகளும் நீக்கப் பெறுதல்வேண்டும்.

105. சடங்குகளும் சம்பிரதாயங்களும் முற்றும் மன்பதையை விடுத்து அகலுதல் அரிது. எவ்வளவு சீர்திருத்தஞ் செய்தாலும் அவைகள் ஒவ்வோரளவிலாதல் ஒவ்வொரு விதமாகக் காலமிடங்களுக் கேற்றவாறு தலைகாட்டிக் கொண்டேயிருக்கும். அவைகளை அவ்வப்போது பொருந்திய முறையில் சீர்திருத்தஞ் செய்துகொண்டேயிருத்தல் வேண்டும்.

106. கண்மூடி வழக்க ஒழுக்கங்கள் பலதிறத்தன. அவைகள் பலப் பல வடிவில் உலகை மயக்குறச் செய்யும்.

107. 'இது கண்மூடி வழக்க ஒழுக்கம்'; 'இது கண்மூடி வழக்க ஒழுக்கமன்று' என்று அறுதியிட்டு அறிஞர்களாலும் கூறுத முறையில் அவ்வழக்க ஒழுக்கங்கள் சாலவித்தை புரியும். ஒருவர்க்கு ஒன்று கண்மூடி வழக்க ஒழுக்கமாகத் தோன்றும்; மற்றொருவர்க்கு அஃது அவ்வாறு தோன்றுவதில்லை. இருவரும் அறிஞராக இருப்பர். கண்மூடி வழக்க ஒழுக்கங்களை மறுத்து வருவோரிடத்திலும், அவர் உணராத வகையில், அவைகளில் ஒன்றோ சிலவோ படிந்துகொண்டிருக்கும். கண்மூடி வழக்க ஒழுக்கங்களின் மாயை அளப்பரிது!

108. கண்மூடி வழக்க ஒழுக்கங்கள் இன்ன இன்ன என்று எப்படி அறுதியிட்டுக் கொண்டு சீர்திருத்தத்தில் இறங்குவது? இயற்கை நெறிக்கு மாறுபட்டனவெல்லாம் கண்மூடி வழக்க ஒழுக்கங்களெனக் கொண்டு சீர்திருத்தத்தி லிறங்குவது அறிவுடைமை.

109. கர்மம் நாள் கோள் ஆகியவைகளைப் பற்றி உலகில் பலதிறக் கருத்து வேற்றுமைகளுண்டு. இவைகளின் ஆதிக்கம் உயிர்கள்மீது தாக்குறுவதில்லை என்று சொல்லுதற்கில்லை. இத்தாக்குதலால் நல்லன விளைதலுமுண்டு; தீயன விளைதலுமுண்டு.

110. கர்மம் நாள் கோள் முதலியன இயற்கை இறைவழி இயங்குவன,

இவைகளை இயக்கும் ஒன்றன் வழி நிற்போரை இவைகள் என் செய்யும்?

111. இயற்கை இறைவழி நிற்குஞ் சன்மார்க்கர்கள், கர்மம் நாள்கோள் முதலியவற்றின் செல்வாக்கால் தாக்குறுவதில்லை.

112. கர்மம் நாள்கோள் முதலியவற்றின்மீது எந்நேரமுங் கருத்தை இருத்தித் துன்புறுவது மடமை. இவைகளை இயக்கும் ஒன்றனமீது கருத்திருத்துவது அறிவுடைமை.

113. 'செய்த கர்மத்தை அனுபவித்தே தீர்தல்வேண்டும்' என்றொரு நம்பிக்கையும் சில விடங்களில் இருந்து வருகிறது. இதுவும் மூட நம்பிக்கையின்பாற்பட்டதே. இயற்கை இறைவனிடம் நெஞ்சைப் பதித்துத் தியானஞ் செய்யச் செய்யப் பழைய கர்மங்கள் செயலற்றுப்போகும்.

114. கர்மம் நாள் கோள் முதலியவற்றைச் சிந்திப்பதற்குப் பதிலாக இயற்கை இறையைச் சிந்திப்பது சிறப்பு.

115. மக்கள் தனித் தனியாகப் புறத்திலும் அகத்திலுஞ் சீர்திருத்தம் பெறுதல் வேண்டும்.

116. மக்களின் தனித் தனித் தூய்மை, வாழ்வுத்துறைகளை யெல்லாந் தூய்மை செய்யும்.

117. புறச் சீர்திருத்தம் இயற்கை வழி உடலோம்பலால் அமைவது; அகச் சீர்திருத்தம் சத்தியத்தால் அமைவது.

118. அகச் சீர்திருத்தத்துக்குச் சத்தியம் அவசியம். சத்தியம் இயற்கை வளர்ச்சிக்குரியது.

119. சத்தியம் ஒன்றுள்ள விடத்தில் எல்லா நல்லியல்புகளும் அமையும்.

120. சத்தியத்தை எப்படி நிலைக்கச் செய்வது? நல்லெண்ணங்களால் அதை நிலைபெறுத்தலாம்.

121. நல்லெண்ணங்கள் அகத்தூய்மைக்கு இன்றியமையாதன.

122. அகத்தூய்மையற்ற புறத்தூய்மையால் பயனில்லை.

123. நல்லெண்ணங்கள், உயிரையும், உயிர் வழி உடலையும் ஓம்பும் அமிழ்தம்.

124. தீய எண்ணங்கள், கூரிய அம்புகள்.

125. எண்ணமே மனிதன்.

126. நல்லெண்ணங்களால் தங்களைப் பண்படுத்திக் கொண்டவர்களிடம் தீயோரின் எண்ணங்கள் பாயின், அவைகள் கூர்மை மழுங்கி வீழும். மற்றவர்களிடம் அவைகள் பாய்ந்து துன்புறுத்தும்.

127. நல்லெண்ணங்களால் தங்களைப் பண்படுத்திக் கொண்டவர்களே தீயோர்களைத் திருத்த முயல்வது நலம்.

128. பிறரைச் சீர்திருத்தஞ் செய்யப் புகுவோர் முதலாவது தம்மைச் சீர்திருத்தஞ் செய்து கொள்ளல்வேண்டும்.

129. சீர்திருத்தத் தொண்டர்கள் கல்வி, அறிவு, அநுபவம், பொறுமை, இரக்கம், தீங்கு புரிவோர்பால் வன்மங் கொள்ளாமை, மன்னிக்கு மியல்பு, பகைவரையும் நேசித்து நலஞ்செய்தல், தற் பெருமைக்கு இரையாகாமை முதலிய நறுங்குணங்களுடையவர்களாயிருத்தல்வேண்டும்.

130. சீர்திருத்தக்காரர்களிடம் நிந்தனை தலைகாட்டலாகாது. நிந்தனை சீர்திருத்த இயல்பன்று.

131. மக்கள் மூட வழக்க வொழுக்கங்கட்கு அடிமையாதற்குக் காரணமாக நிற்பது அவர்கள் மாட்டுள்ள அறியாமையேயாகும்.

132. அறியாமையைப் போக்குதற்குரிய வழி அறியாமையை நிந்திப்பதன்று; அறிவை விளக்குவதேயாகும். இருளை நிந்திப்பதால் இருள் நீங்காது. ஒளியைக் கொண்டுவரின், இருள் தானே ஓடும்.

133. சீர்திருத்தத் தொண்டுக்குரிய முறைகளைப் பலபடக் கூறலாம். அவரவர்கள் தங்கள் தங்கள் அறிவாற்றலுக்குத் தக்கவாறும், காலதேச வர்த்த

மானத்துக் கேற்றவாறும் முறைகளைக் கோலிக் கொள்ளலாம்.

134. சீர்திருத்தப் பணிகளைப் பிரசாரம் விரதம் தியானம் ஆகிய மூன்று வழியில் நிகழ்த்தலாம்.

135. இலட்சம் பிரசாரகர்கள் முயற்சியினும் ஒரு நல்லோன் விரதமும் தியானமும் பெரு நலஞ் செய்யும்.

136. பொருளாதாரம், ஒழுக்கம் முதலியன குறைவின்றி நிறைவு பெற்று, அவைகளால் எல்லாரும் இன்புற்று வாழும் ஒரு நிலை உலக முழுவதும் நேரின், அப்பொழுது சன்மார்க்கம் எற்றுக்கு என்று சிலர் கருதுவதுண்டு. இக்கருத்துத் தவறுதலுடையது.

137. சன்மார்க்கமென்பது உலக வாழ்வளவில் நின்று விடுவதன்று. அது மேலுங் கடந்து நிற்பது. தியானம் முதலியவற்றிற்குச் சன்மார்க்கம் வேண்டற்பாலது.

138. பொருள், ஒழுக்கம் முதலியவாற்றால் எல்லாரும் இன்புறும் நிலை, தியானம் முதலிய சன்மார்க்கத் துறைகட்குச் சாரம் போன்றது.

139. பொருள் முடையும், தீயொழுக்கமும், இன்ன பிறவும் மக்களிடை அமைதி நிலை பெறுத்தாமையான், அவர்கள் சன்மார்க்கர்களாக வாழ்தற்கு இடம் நேராமற் போகிறது. பொருள் நிலை முதலியன ஒழுங்குபட்டு, எல்லாருங் கவலையின்றி இன்புறுவார்களாயின், மக்கள் தியானம் முதலிய சன்மார்க்கத் துறைகளில் எளிதில் ஈடுபடுதற்கு வழி நேரும்.

140. பொருளாதாரம் முதலியவற்றைச் சீர் செய்ய உலகம் முனைந்து நிற்பதன் அடிப்படையான நோக்கம் என்ன ? வாழ்வில் தியானம் முதலியன ஆக்கம் பெறுதல் வேண்டும் என்பதே.

141. உயிர்களின் அறியாமையை நீக்கி, அவைகளின் முழு அறிவை விளக்கஞ் செய்யப் புகுந்த இயற்கை அன்னை, பொருளாதாரம் முதலியன செம்மை பெறும் அளவில் தன் முயற்சியை நிறுத்திக் கொள்ளாள். அங்ஙனம் நிறுத்திக் கொள்வது இயற்கையின் அறமன்று.

VI. சங்கம்

1. சன்மார்க்க சங்கம், சமரச சங்கமென்றும், சமரச சன்மார்க்க சங்கமென்றும் அழைக்கப் பெறலாம்.

2. சன்மார்க்க சங்கம், கால தேச வர்த்தமானத்துக் கேற்ற முறையில் அவ்வப்போது ஒவ்வொருவிதப் பெயர் பெற்று வருகிறது.

3. சன்மார்க்க சங்கம் ஒருபோது ஒருவரால் காணப்பட்டதன்று ; அஃது என்றும் இருப்பது.

4. சன்மார்க்க சங்கத்தின் நுட்பம் ஒவ்வொரு போது ஒவ்வொருவரால் விளக்கஞ் செய்யப்படும்.

5. சன்மார்க்க சங்கம் இறைமுதல் எல்லா உயிர்களையும் அங்கமாகக்கொண்டது.

6. சங்கத்தின் தலைமை - இறை ; அமைச்சு - இயற்கை ; நிர்வாகக்கூட்டம் - குருமார் திருக்கூட்டம் ; உறுப்புக்கள் - எல்லா உயிர்களும் ; சந்தா - இரக்கம்.

7. உறுப்புக்களாய உயிர்களிற் சிறந்தவர்கள் மக்கள்.

8. அம்மக்கள் நான்கு வகைப்படுவார்கள்.

9. முதல் இனத்தவர், இயற்கை வாழ்வு நடாத்தி, இயற்கைத் தியானத்தில் முதிர்ந்து, குருதரிசனம் பெற்று, இறையொளி கண்டு, தங்களுக்கென ஒன்றுமின்றி, மற்றவர் பொருட்டு உடல் தாங்கிக் குருமார்களுடன் உறவு கொண்டு வாழ்வோர்; இரண்டாம் இனத்தவர், இயற்கை வாழ்வில் நின்று, இயற்கைத் தியானத்தில் அமர்ந்து, உயிர்கட்குச் சேவை செய்வோர்; மூன்றாம் இனத்தவர், சன்மார்க்கத்தை அறிவால் உணர்ந்து, உணர்ந்தவாறு நடக்க முயல்வோர்; நான்காம் இனத்தவர் சன்மார்க்க ஒருமை புணர்வின்றிப்

பண்மை யுணர்வுடன் வாழும் மற்றவர்கள்.

10. இவ்வினத்தவர்களைப் படிப்படியாக உயர்த்தி மேம்படுத்த வல்லது தொண்டு.

11. தொண்டு என்பது முனைப்பில்லாவிடத்தில் நிகழ்வது. முனைப்புள்ள விடத்தில் நிகழ்வதுபோலித்தொண்டேயாகும். தன்னலச் செயலும் தொண்டாகாது. அதுவும் போலியின்பாற்பட்டதே. பயன் கருதாப்பணியே சிறந்த தொண்டாகும்.

12. தொண்டு, உயிர்களின் அறியாமைக் கட்டை அவிழ்த்து அவிழ்த்து, அறிவு விளக்கஞ் செய்து, இயற்கை அன்னை உயிர் வளர்ச்சிநாடிப் பொழியுங் கருணையை உயிர்கள் பெறத் துணை செய்வது.

13. உயிர் நலனுக்கும் வளர்ச்சிக்கும் தொண்டு இன்றியமையாதது.

14. தொண்டில்லா இடத்தில் இயற்கை அன்னையின் கருணை பாய்வதில்லை.

15. முதல் இனத்தவர் குருமார்களுடன் உறவு கொண்டவர்களாதலின், அவர்களைப்பற்றி இங்கு ஒன்றும் விரித்துக் கூறவேண்டுவதில்லை.

16. இரண்டாம் இனத்தவர், முதல் இனத்தவராவதற்கு முயல்வது இயல்பு. அம்முயற்சி ஆக்கம் பெறுதற்குத் தமக்குரிய தியானம் முதலியவற்றுடன் தமக்குக் கீழுள்ளவர்களைத் தங்கள் நிலைக்குக் கொணரத் தொண்டு செய்தல் வேண்டும். அத்தொண்டு அவர்களை மேன்மைப்படுத்தும்.

17. மூன்றும் இனத்தவரும் தாம் மேல் நிலை எய்துதற்குத் தமக்குக் கீழுள்ள மக்களைத் தங்கள் நிலைக்குக் கொண்டுவர அவர்கள் நலங் கருதி உழைத்தல் வேண்டும். அவ்வுழைப்பு அவர்களை உயர்த்தும்.

18. நான்காம் இனத்தவர்கள் ஒருமைச் சன்மார்க்க உணர்வு பெறாதவர்களாதலாலும், தொண்டின் திறத்தை அறியாதவர்களாதலாலும், அவர்கள் சிறக்கச் சன்மார்க்க வாயிலாகத் தொண்டு செய்து, தொண்டின் இயலை அவர்கட்கு அறிவுறுத்த வேண்டுவது மற்றவர்கள் கடமை. இவர்கள் நலங் கருதித் தொண்டு செய்யாதவர்கள் சன்மார்க்களாகார்கள்.

திரு. வி. கலியாணசுந்தரன்.

(தொடரும்)

நமது சிந்தனை

[திரு. சி. சதாசிவனார்]

III

வெற்றி

நாம் இவ்வுலகில் வாழ்க்கை நலன்; உடல் நலன், உயிர் நலன் இவையாவும் ஒருங்கே பெற்று, நமது நாட்களை இனிதாகக் கழிக்க விரும்புகின்றோம். வாழ்நாள் இனிமையாவதற்குப் பொருள் பெரிதும் வேண்டும் எனவும் நம்புகின்றோம். வேண்டிய பொருள் மட்டும் இருந்துவிட்டால், இன்ப வாழ்வை வென்று, எல்லாக் காரியங்களையும் சாதித்து, வெற்றிக் கொடி நாட்டிவிடலாம் என்று மனப் பால் குடிக்கின்றோம். நாம் எண்ணியவற்றை அடைந்து, அதனால் வரும் இன்பத்தை நுகர்வதையே நாம் எல்லோரும் பெரிதும் விரும்புகின்றோம். இவ் "வெற்றி" யை அடைவதற்கே, எளிய தோட்டி முதல் உயர்ந்த அரசன்வரை உள்ளோர்கள், தாம் பிறந்தது முதல் சுடுகாட்டிற்குப் போகும்வரை உழைக்கின்றார்கள்.

எத்தனை பேர் இவ்வெற்றியை அடைகின்றார்கள் ? உண்மையாக, வெற்றி யடைந்தவர்களை விரலால்

எண்ணிவிடலாம். மிக மிகச் சிலரே தொட்ட கருமம் முடித்து, அதனால் வரும் நலன் எய்துகின்றனர். உடல் வருந்தி உழைப்பவர்களைப்போல, இச் சிலர் தாம் ஆரம்பித்த காரியத்தை முடிப்பதில் அதிகமான சிரமம் எடுத்துக் கொள்வதாகத் தோன்றவில்லை. இவர்களுக்குச் சௌகரியமான காலம், நட்பு, தேகசுகம் இவை தாமாகவே வருவனபோல் தோன்றுகின்றன. இவர்கள் வெற்றியைத் தேடி அலைவதில்லை. அவைகள் தாமாகவே இவர்களை அடைகின்றன. எவ்விதமோ எண்ணியன செவ்வனே நடந்து, இவர்களும் அவைகளின்பயனாகிய இன்பத்தை அநுபவிக்கின்றனர். இத்தகையோர் மிகச் சிலரே யாவர்.

இதற்கு மாறாக, பெரும்பாலோர் எண்ணிய கருமம் கைகூடாது மனத் தாங்கலுறுகின்றனர். உடல் வருந்தி உழைத்தால் என்ன? நல்ல சந்தர்ப்பங்கள் கிடைத்தால் என்ன? அல்லது பொருள் வலி இருந்தாற்றான் என்ன? இவர்கள் தொட்டகாரியம் துலங்குவதில்லை. தங்கத்தை அணுகினாலும் அது இரும்பாக மாறி, பயனற்றதாகி விடுகின்றது. "பட்டகாலிலேயே படும்" எனும் மொழிக்கு இலக்காக இவர்களுக்கு இழுக்குகள் ஒன்றாக வருவன அல்ல. ஏன் இப்படிச் சிலர் தொட்டன தங்கமாகவும், மற்றும் பலர் செய்வன அவலமாகவும் ஆகவேண்டும்? நாம் எவ்விதம் ஒழுகினால் வெற்றியடையலாம்? என்று சிந்திக்குமுன் - வெற்றித் திறவைத் தேடத் தொடங்குமுன் - அது எங்குக் கிடைக்காது என்று அறிந்துகொள்வது நன்மையாகும்.

நல்ல சமையம் கிடைக்கவில்லை; என் செய்வது? என்றும், விதிப்பயன் என்றும், அதிருஷ்டம் இல்லை என்றும், சாதாரணமாக நாம் சொல்வது வழக்கமாக இருக்கின்றது. இது உலக இயல். சமையம், சந்தருப்பம் - என்பது ஒரு பொருள் அல்ல. அது காற்றில் மிதந்துகொண்டிருப்பதும் இல்லை; ஒருவனுக்கு அமைந்து வெற்றி அளித்தும், ஒருவனுக்கு அமையாது நிலையழிவை வழங்கியும் இயங்கும் ஒன்றல்ல. புறத்தே அமையும் ஒரு நிகழ்ச்சியால் மட்டும் சித்தி உண்டாவதில்லை. அதனால் நலன் உண்டாவதாயிருந்தால், அவ்வித அமையம் அடைந்தோர் அனைவரும் ஒருநிற நிலைமையையே முடிவில் அடைதல்வேண்டும். இவ்வண்ணம் நடப்பதை நாம் காணுவதில்லை. உடன் பிறந்தோர் இருவர் ஒரு தொழிலில் ஈடுபடுகின்றனர்; தொழில் முறிந்து இருவரும் நட்டமடைகின்றனர்; ஒருவன் "அந்தோ! அழிந்தேன்!", என்று மனமுடைந்து தன்னை மாய்த்துக் கொள்கிறான்; மற்றவன், மறுபடி சிறு தொழில் ஆரம்பித்து, கால அளவில், முன்னைவிடச் சிறந்த நிலையை அடைகின்றான். இருவருக்கும் வந்த சந்தருப்பம் ஒன்றே; ஆயினும் இருவரது மன நிலைமட்டும் வெவ்வேறாக இருந்தமையான், ஒருவன் தன்னை கொன்றுகொண்டு உயிர் நீங்குகின்றான்; மற்றவனோ தைரியத்தைக் கைக்கொண்டு, நட்டத்திற்குக் காரணங்கண்டு, வேறு திட்டம் போட்டு, உழைத்து, சிறந்த நலன் எய்துகின்றான். சந்தருப்பம் ஒன்றாக இருந்தும் இருவரது முடிபு மட்டும் வெவ்வேறாகி விடுகின்றது. இத்தகைய நிகழ்ச்சிகள் பலப்பல. இவைகள் "புறத்தே உண்டாகும் சந்தருப்பங்களால் வெற்றி உண்டாகாது" என்னும் உண்மையை விளக்குகின்றன. இந்நடப்புக்களால் உண்மை வெற்றியளிப்பது "மன நிலை" என்பதும் தெளிவாக்கப்படலாம்.

அதிருஷ்டம் அல்லது விதியினால் ஒருவனுக்கு வெற்றி உண்டாவதில்லை. உலகில் கேடுற்றவனே விதியைப்பற்றிப் பேசுகின்றான். தனக்கு நல்ல அதிருஷ்டம் இல்லாததால்தான், கீழ் நிலைக்கு வந்துற்றதாக நினைக்கின்றான்; "விதி வலிது" என்றும் கூறுகின்றான். "இன்று நமக்கு உணவு கிடைக்கவேண்டிய விதி இருந்தால் கிடைக்கட்டும்" என்று நாம் வாளா உட்கார்ந்திருந்தால் சோறு வாயில்

வந்து விழுமோ? இப்படி எண்ணுவது அறியாமை ஆகுமல்லவா? ஒரு காரியத்தைச் செய்து முடிக்க இயலாத திறனிலிகள் "விதி" என்னும் ஒரு வார்த்தையில் தங்களுக்குற்ற அவமானத்தை மறைத்துக்கொள்ள முற்படுகின்றார்கள் என்று கூறுவது மிகையாகாது. விதி வலிதாயினும் அதை மதியால் வெல்லலாம். நம்மிடம் அறிவு எனும் அரும்பொருள் இருக்கின்றது. அதைச் சரியான துறைகளில் உபயோகித்தால் விதியை வெல்லல் மிக எளிதாகலாம். நாம் சிறப்படைவதும் சிறுமையடைவதும் நம்மைப் பொறுத்தே இருக்கின்றன.

"தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்"

என்பது மணிவாசகனார் திருவாக்கு.

வெற்றியளிப்பதில் புத்தி சாதுரியமும் பிரயோசனமில்லை. பெரிய புத்திசாலிகள் பிழைக்க வழியறியாது தவிப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். உலகில் அறிவு கூரியர் யாவரும் நல்ல நிலையில் இருக்கின்றார்களா? அரிய சோதனைகளை வென்ற எத்தனை பெரியோர்கள் அவரவர் உழைக்கும் துறைகளில் சிறப்படையாது, அறிவில் தங்களிற் சிறியோர் ஆணைக்கு அடங்கி மடிகின்றார்கள்? அறிவிற் குறைந்த எத்தனை மனிதர்களை நாம் உயரிய நிலையிற் காணவில்லை?

நன்னிலைமையும் வெற்றியைத் தருவதில்லை. நிறை செல்வமுடைய எத்தனை மனிதர் எண்ணியன நிறைவேறாது மனத்தாங்கலுறுகின்றனர்? நிறைவு, நட்பு, நல்வாக்கு, சுகம் ஆதிய யாவும் பொருந்தி இருந்தும், இவர்கள் எண்ணியவாறு நடப்பதில்லை. இவை ஒன்றும் இல்லாத மற்றொருவன் அக்காரியத்தை வென்று விடுகின்றான். எளிய நிலையிற் பிறந்த சிறுவர் எத்தனை பேர் சாலச் சிறந்த நிலையை அடைந்திருக்கின்றார்கள்?

தலை முறை வழியாகவும் வெற்றி வருவதில்லை. தகப்பன் அரசன்; பிள்ளை நாடோடி. தகப்பன் வீரன்; மகன் பயங்கொள்ளி. அப்பன் சொல் வலியன்; பிள்ளை ஊமை. இவ்விதம் எவ்வளவு சான்றுகள் நமக்கு வேண்டும்? அப்பன் இரந்துண்ணி; மகன் மந்திரி. தகப்பன் தற்குறி; பிள்ளை பண்டிதன். இப்படியும் எவ்வளவு வேண்டும்?

முயற்சி, திறமை, இவைகளாலும் பயனில்லை. இவை வெற்றியளித்தற்கு உதவியாக மட்டும் ஆகலாம். மாநிலத்தில், மற்றொருவன் வெற்றியடையும் பொருட்டு, அவன்கீழ் எத்தனை மனிதர் விடா முயற்சியாக உழைக்கின்றார்கள்? இவர்கள் எல்லோரும் தாம் வேண்டியவைகளை அடைகின்றார்களா? திறமை சிறிதும் இல்லாத ஒருவன், திறனுடைய பலரது உதவியால், தாம் விரும்பியவற்றை அடைவது கண்கூடு. ஆக, முயற்சி, திறன் இவை தனிமையில் நன்மை பயவா என்பது வெள்ளிடைமலை.

சமயம், வினைப்பயன், நன்னிலைமை, முயற்சி, திறன், கூரிய அறிவு இவை யாவும் ஒருங்கே பொருந்தியிருந்தாலும் சிறிதும் பயனில்லை. பின், வெற்றி, நாம் விரும்பியதை நம்மிடம் இழுக்கும் சக்தி, எங்கிருக்கின்றது? இவ்வன்மை மனதில், புறமனதிலல்ல, உள்ளத்தினுள்ளே அடங்கி இருக்கின்றது. வெற்றி என்பது மனதின் ஒரு நிலை. உண்மையான வெற்றியடைந்து, உலகில் கவலையற்று, எண்ணியன நடக்கப் பெற்று, மன நிம்மதியோடு வாழும் தோட்டி முதல் தொண்டமான் ஈறுக உள்ள சிறந்தோர்களுடன் ஊடாடுவோமாகில், அவர்கள் யாவரும் ஒரு திற மனப்பாங்குடையவர்களாய் இருத்தல் காணலாம். அவரவர் நிலைமைக்குத் தக்கபடி ஒருதிற நோக்கமுள்ளவர்களாயும், வெற்றியடைதற்குரிய மனப்பாங்கும், சொல்ல இயலாத ஒருவித உணர்ச்சியும், அவர்களிடம் இருப்பதை நாம் அறிந்து கொள்ளலாகும். இவ்வித மன நிலைமை, உலகில் பல் வேறு துன்பங்களுக்கு இலக்காகி, எண்ணியன நடைபெறாது. நட

மாடும் பிணங்களிடம் சிறிதும் அகப்படாது. இவர்களிடம் தோல்விக்குரிய ஒருவித உள்ளமே இருக்கும்.

அகத்தின் வலி அளவிடற்கரியது. அதில் எழும் எண்ணங்களின் வன்மை இன்னும் அதிகம். நமது எண்ணங்களே நமது உலகை நமக்கு நல்குகின்றன. ஆதல் பற்றி அகத்தில் வெற்றியடைந்தவன் ஒருநாளும் காரியத்தில் இழுக்குறுவதில்லை. தன்னுள் உழலும் விலங்குகளை வீட்டி, தன்னுயிருக்கு உயிராக ஒளிரும் சாரத்தின் உண்மையை உணர்ந்த தெய்வமனம் உடையோனது உள்ளத்தில், எப்போதும் வெற்றி எண்ணமே மிகுந்து எழும். அவனுக்குப் புறத்தில் அமையும் சமயங்கள் எப்படி இருந்தால் என்ன? எவ்வளவு விரோதமாய்த் தோன்றினல் என்ன? அவன் முடிவில் காரிய சித்தியையே அடைவான். அவனுக்கு நன்மைகள் ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்து ஓடிவருவன ஆகும். தனது உண்மையை அறியாத, விலங்கு மனதிற்கு அடிமையானவனது உள்ளத்தில் சந்தேகமும், "இழுக்கடைந்தால் என் செய்வது?" என்ற எண்ணமுமே மிகுந்து கிடக்கும். இவனுக்குத் துன்பங்கள் ஒன்ருக வருவதில்லை. சமயங்கள் எவ்வளவு சாதகமாயிருக்கட்டும்; நன்னிலைமை இருக்கட்டும்; எப்போதும் இவன் அனுபவிப்பது துன்பமே.

உலகம் மனே மயம். மனதின் சக்தி மிக வலிது. புறத்தில் தோன்றுபவைகட்கு மனமே காரணம். மனம் காரணம்; வெளித் தோற்றம் காரியம். தெய்வ மனம் உலகை ஆக்கும் சத். மனிதனது உள்ளம் இந்தச் சத்தின் சாரம். இவ்விரண்டும் பொருளால் வேறுபட்டவை அல்ல. ஆண்டவன் மனம் உலகை ஆக்குகின்றது. நமது மனம் நமக்கு அவ்வுலகை நம் எண்ணப்படி திரித்து மாறுபடுத்தித் தருகின்றது. உள்ளத்தின் நோக்கம், நிலை, எண்ணம் எவ்விதம் இருக்கின்றதோ அவ்விதமே நமது உடல் வாழ்வு வரும் சமயம் ஆகியன நமக்கு நன்மையாகவோ, தீமையாகவோ வந்து அமைகின்றன. இவ்வுண்மை மன நூல்களால் முடிவு செய்யப்பட்டதாகும்.

உள்ளத்தின் அசைவே எண்ணமாகும். எண்ணத்தின் வன்மை அளவிடற்கரியது. பலதிற பூத சக்திகளைக் காட்டிலும் எண்ணமே மிக்க வலியுடைத்தாகும். எண்ணமே மற்ற சக்திகள் யாவற்றையும் அடக்கித் தொழிற்படுத்துகின்றது. நாம் எண்ணும் வண்ணம் நமது உடல், வாழ்வு முதலியன ஆகின்றன. எப்போதும் அகத்தில் என்ன வழக்கமாய் நினைக்கின்ருேமோ அவ்வெண்ணமே நமது புறத்தே பரிணமிக்கின்றது. உள்ளமும், மனமுங் காரணங்கள்; வாழ்வு, சந்தருப்பம், வெற்றி, தோல்வி இவை காரியங்கள். ஆதலால் வெற்றி மனப் பாங்குடையவன் ஒருநாளும் தோல்வியடைவதில்லை. பெரிய இடையூறுகள் குறுக்கிட்டாலும் அவைகளை அவன் எளிதில் வென்று முடிவில் வாகையே சூடுவான். மிதக்கும் தன்மை வாய்ந்த ஒரு நெட்டித்துண்டை எத்தனை தாம் எவ்வளவு ஆழ அமிழ்த்தினலும் அது நீரின் மேற் பரப்பிற்கே வந்து விடுமல்லவா?

இவ்விதமே தோல்வி மனப்போக்குடைய மனிதன் ஒருநாளும் வெற்றியடையமாட்டான். அவனுக்கு பிறர் என்னதான் உதவி செய்யட்டும். முன் நிலைக்கே கடிதில் நழுவி விடுவான். உதவி செய்வோனை அட்டைபோல் பற்றி உறுஞ்சுவதில் எப்போதும் முயன்று கொண்டே இருப்பானே தவிர, தனது நிலையை மாற்றிக் கொள்ளும் வகை அவனுக்குத் தெரியாது. தானே கஷ்டப்பட்டுத் தேறும்படி உதவி செய்யாது விட்டுவிடுவதே, அவர்களை முன்னேற்றச் செய்யும் சிறந்த வழியாகும்.

சுருங்கக் கூறுமிடத்துப் புறத்தே நிகழுஞ் சமயங்களாலாதல், விதியினலாதல், திறன், நன்னிலைமை, பொருள், முயற்சி, புத்தி, படிப்பினை, நட்பு ஆகிய எவற்ருலாதல் வெற்றி

யுண்டாவதில்லை. அகத்தே உள்ளத்திலெழும் வெற்றி எண்ணமே புறத்தே நன்மையாகப் பரிணமிக்கின்றது. சித்தத்தின் மகத்தான வன்மை ஒன்றினாலேயே நாம் நன்மை யடைதல்கூடும்.

உலகில் மகன் வெற்றியடைதற்குரிய வன்மை - ஆற்றல் - ஒரு தெய்விக சக்தியாகும். இது அவன் அகத்திலேயே அடங்கிக் கிடக்கின்றது. வரம்புடைய புறமனதிற்கும் (Surface mind or conscious mind) அது எண்ணும் கட்டுடைய எண்ணத்திற்கும் இவ்வாற்றல் சிறிதும் இல்லை. தொடக்குடை மனதினால் எண்ணும் எண்ணம் ஒருவாறு முடிவடைந்தாலும் அது நீர்மேற்குமிழி எனக் கடிதில் அவமாகும். உள்ளே மறைந்து கிடக்கும் உள்ளம் தெய்வமனம் (Super conscious) எங்கும் நீக்கமற நிறைந்து கிடக்கும். கட்டற்ற பரம்பொருளைத் தொட்டு நின்று, அவ்வகண்டத்தினின்றும் ஆற்றலை அடைகின்றபடியால், அதன் வன்மை இத்தகைமைத்து என்று சொல்லல் இயலாது. இவ்வாற்றலால் மட்டுமே மனிதன் உண்மை வெற்றியடையலாம். இச்சக்தி எல்லோரிடமும் இருக்கின்றது. இதை உணர்ந்து, பெருகி அனுபவத்திற்குக் கொண்டுவந்து, சரியான துறைகளில் உபயோகப்படுத்தாத காரணத்தாலேயே மனிதன் வீழ்கின்றான்.

வெற்றி உணர்ச்சி சிலரிடம், முற்பிறப்பிலோ இப்பிறப்பிலோ செய்யப்பட்ட பயிற்சியால், அடைந்த அனுபவங்களது முதிர்ச்சியால், இயற்கையாகவே மனதில் அதிகமாக உறைந்து கிடக்கலாம். வெற்றி யடைவிக்க இவர்களது இயல்பு. தற்காலக்கல்வி முறையும், நாகரிகமும் இவரது தெளிந்த உள்ளத்தைக் கலக்குவதில்லை. இவர்களைப்பற்றி நாம் அதிகம் கவனிக்க வேண்டுவதில்லை. வெற்றியுணர்வு இயல்பாக இல்லாத மக்கட்கு இந்நாட் கல்விமுறை, அவ்வித நல்லுணர்வை நல்கும் தன்மையதாகவில்லை என்னலாம். புறமனதிற்கு மட்டும் ஏதோ சிறிது உணவு கிடைக்கின்றதே தவிர சக்தி நிலைக்களனாகிய உள்ளம் இக்காலப் படிப்பால் சிறிதும் தெளிந்து சிறப்படைவதாகத் தோன்றவில்லை. விலங்கு மனதின் விலங்கை அறுத்துத் தெய்வ மனதை ஒளிரச் செய்வதற்குக் கல்வி சிறிதும் உதவி செய்வதில்லை. சோதனைகளில் நன்கு தேறிய பலர், தேறாத சிலரிடம் வேலை செய்ய நேருகின்றதே இதற்குத் தகுந்த சான்றாகலாம். பட்டங்களைப் பெற்றிருந்தும் மனிதனது அகத்தில், அவனது உண்மை நிலையை உணர்த்தும் தெய்விக உணர்ச்சி, அறிந்தவைகளை வாழ்வில் உபயோகிக்கும் திறன் இவை சிறவாமையே அவனை முன்னேற வொட்டாது தடுக்கின்றன. இன்னல் உணர்வைக்கிளர்ந்து பெருக்காத இக்கல்வியும், பொருள் மிகுதியாக உள்ளவனுக்கு மட்டுமே கிடைப்பதாக இருக்கின்றது. தனமுடையோன் வாழ்வு அதிக துன்பமில்லாது நடக்கும்; துன்பமில்லாதபோது மனிதனுக்கு நல்லுணர்வு - உண்மை வன்மை - இவற்றைப் பெருக்க மனமும், அவகாசமும் அகப்படாமற் போவதியற்கை. இது பொருளால் - நன்னிலைமையால் - வரும் பெருந்தீமை. துன்பந் தரும் அனுபவங்கள் எளியவனுக்கு - வேறு பற்றுக் கோடில்லாதது பற்றி - எண்ணும் சக்தியைக் கொடுக்கின்றது. யோசனையால் அறிவும் சக்தியும் பெருகி, அவனிடம் உண்மை ஆற்றல் உண்டாகின்றது. கீழிறக்கும் தீக்குணங்கள் அவனிடம் அருகி அருகி, அவனது மனம் மேல்நோக்கியே நிற்க ஆரம்பிக்கின்றது. தனது அகத்தில் ஒளிரும் ஊற்றுப் பெருக்கைக் கண்டு, உள்ளொளியைப் பெருக்கித் திறனடைகின்றான்.

நாம் ஓரிடத்தில் உட்கார்ந்து ஊன்றி உன்னுவோமாகில் எக்காரியம் செய்யலாம் என்று புலப்படும். எவ்வழிகளில் உழைத்தால் நமக்கும் பிறருக்கும் நன்மை விளையும் என்று அறிந்துகொள்ளலாகும். அத்துறைகளில் உழைத்துத் தேறிக் கடனுற்ற,

பின் அதனால் நமக்கு நன்மை விளைதலைக் காணலாம். நாம் நமக்கு நன்மை - லாபம் - உண்டாக வேண்டும் என்று மட்டும் எண்ணுகின்றோம். ஆனால் நம்மால் இயன்ற நன்மையைப் பிறருக்குச் செய்ய அஞ்சுகின்றோம். இது இயற்கைக்கு விரோதம். நமக்கு நன்மை உண்டாக வேண்டுமாகில் நாம் பிறருக்கு நன்மை செய்யவேண்டும். உள்நோக்கி, நவசக்தியை அடைந்து, அதனால் வரும் பயனை மற்றவரோடு பங்கிட்டு நாம் ஒழுகினால் மட்டுமே நமக்கு நன்மைமேன்மேலும் பெருகிக்கொண்டு போகும். நமக்கென வாழாது உலகத்திற்காக வாழ்தலே உண்மை வெற்றியை அளிக்கும்.

வெற்றி என்பது என்ன? நமது அகத்தில் ஆண்டவன் கற்பனையால் எழுந்த அவா நிறைவேறல். தெய்வ மனதில் ஆண்டவன் செயலால் எழும் ஒன்று நன்மையாகவே இருக்கும் என்பதற்கு யாதும் ஐயுறவில்லை. நமது மனதில் எழும் அவா பிறர்க்கு நன்மை நல்குவதாயிருக்குமாகில், அந்த எண்ணம் தெய்வ மனதில் இறை அருளால் அனுப்பப்பட்டது என்று அறிந்து கொள்ளலாம். இவ்வித எண்ணம் நிச்சயம் நிறைவேறும். அதுவும் நம்முள் இருக்கும் இறைவனது வன்மை ஒன்றினாலேயே நிறைவேற வேண்டும். புலன் பொறி அடக்கமிலான் உள்ளத்தில் இத்தகைய எண்ணம் உண்டாகாது. இவனது எண்ணங்களின் மேல் சுயநலப்பூச்சு பொலிந்து விளங்கும். சுயநலங் கலந்த எண்ணம் - மனிதனது எண்ணம் ஒருவாறு முடிந்தாலும் நிலைபெற்று நெடுநாள் நில்லாது.

உண்மை வெற்றிவேண்டில் இத்தெய்வ மனம் ஒளிரவேண்டும். அதன் வன்மை பெருகிய காலத்து நமது வாணாள்மாறும்; நமது நோக்கமும் மாறும். அப்போது உண்டாகும் எண்ணத்தைச் செய்துமுடிக்க நமக்குத் திறமையை ஆண்டவன் வைத்திருக்கின்றார் என்று உணர்வோம். முன் இடையூறாகத் தோன்றியவைகள் இப்போது கானல் நீராகின்றன. சக்தியின் ஊற்றுக்கண் நம்மகத்தே திறந்து விட்டபடியால் நாம் எவ்வித துன்பங்களுக்கும் அஞ்ச வேண்டுவதில்லை. அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்ச வருவதுமில்லை. ஆற்றுப்பெருக்கை அணையினால் அடைக்கலாம். இவ்வூற்றுப் பெருக்கை அடைக்க யாராலும் இயலாது. அது நம்மை முன்னிழுத்துச் சென்றே தீரும்.

இத்தெய்வமனம் பெற்றவனே உண்மை வெற்றி - அழியாத - குறையாத - துன்பக் கலப்பில்லாத இன்பம் அடைபவன். இவன் வாழ்வில் உள்ள எல்லாத் துறைகளிலும் நன்மை அடைவான். தனக்கு இவ்வுலகில் இவ்வளவு பொருள்தான் வேண்டும் என்று எவன் வரையறுத்து, அதை அடைந்ததும், மனச் சமாதானம் அடைகின்றானோ அவனே சிறந்த வெற்றியடைகின்றவன். தனது குடும்பத்தில் சிறிதும் சச்சரவு இல்லாமல், ஒற்றுமையோடும், மகிழ்ச்சியோடும் தனது கடமையைச் செய்து எவன் வாழ்வு நடாத்துகின்றானோ அவனே உண்மை வெற்றி அடைகின்றவன். பின்னும் எவன், உலக வாழ்வில் அழுந்தித் தனது மனதைக் கல்லாக்கி விடாது, பிறர் வருத்தம் தனதாய் எண்ணி இரங்கும் இளகிய மனத்தோனாய், அவசியம் வேண்டியதற்கு மேல் பொருள் குவிப்பதில் மனம் வெறுத்தோனாய், தனது குணங்களைச் செம்மைப்படுத்தி, தீயன செய்தல் ஒழித்து. குடும்பத்தார் யாவரும் நல்லவன் என்று வாழ்த்த, தனது ஆட்களும் போற்ற, எல்லோருடனும் நலியாத அன்பு பூண்டு, தன்னலங் கருதாது, காலத்திற்கேற்பப் பிறருக்கு நன்மை செய்வதையே தனது ஒரு நோக்கமாகக் கொண்டு, பணிசெய்யும் பெற்றியாளனோ, அவனே உண்மையில் சிறந்த வெற்றி அடைகின்றவன்.

இவ்விதம் நமது வாணாளைப் பண்படுத்த முடியுமா? நாம் மனது கொண்டால் செய்யலாம். மனம் களைக்

காது விடா முயற்சியோடும், பொறுமையோடும், நம்பிக்கையோடும், உழைக்கத் தீர்மானம் செய்துகொண்டால் திண்ணமாக இவ்விதம் நடக்கும். பயிற்சியால் நமது மனதை மாற்றியமைக்கத் தீர்மானித்துக் கொண்டால் நிச்சயம் வாணுளைச் சீர்திருத்தலால், நாம் பயிற்சியால் மனதை ஆண்டவன் வழிப்படுத்தா விட்டால், நாமே முயன்று மனதை மாற்றியமைக்கா விட்டால், துன்ப அனுபவங்களாய சாட்டிகள் நம் மேற்றாக்கி நம்மை "வழிபடு" என்று கட்டாயப்படுத்தும். நாம் ஏன் இவ்விதத் துன்பங்களுக்கு ஆளாக வேண்டும்? வாமே வழிப்படில் பின் எக்காளும் இன்பமே; துன்பம் இல்லை. வெற்றியே; தோல்வி இல்லை.

முதலில் நாம் செய்ய வேண்டிய தென்ன? கட்டுடைய தீமை தரும் எண்ணங்களை (Negative thoughts) நமது சித்தத்திலிருந்து அறவே அகற்ற வேண்டும். அதனால் நமது சித்தம் தெளியும். பிறகு நன்மையான எண்ணங்களை (Positive thoughts) நமது உள்ளத்தில் ஊன்ற வேண்டும். இந்த மாறுதலை நாம் செய்து விட்டால், இந்த வெற்றியை நாம் அகத்தில் அடைந்து விட்டால், பின் நமக்குப் புறத்தில் வெற்றி தானுகத் தோன்றும்.

இந்த மன மாற்றத்தைச் செய்வதற்கு,—சித்தம் தெளிவடையச் செய்வதற்கு, முக்கியமாக வேண்டப்படுவது ஆழ்ந்த சிந்தனை; தியானம்.

இந்தியப் பொருளாதாரம்

I. இந்திய மக்கள்

[திரு. A. முத்தையா, எம். ஏ.]
(Lecturer in Economics, Pachaiyappa's College)

நம் நாடு மிகப் பெரிய நாடு. இத்தேய மக்களின் தொகை 351, 450, 689. இத்தேயத்தினரின் எண் மிக அதிகமாயிருப்பினும் பொருளாதார நிலை மிகக் கேவலமானதாக இருக்கிறது. அதனை விருத்தி செய்யவேண்டுமென்பது அனைவரும் விரும்பும் விஷயம். எனவே, இந்த நிலையில் இந்நாடிருப்பதன் காரணங்களை ஆராய்தல் அவசியமாகும். அக்காரணங்கள் பலவற்றுள் முதலாவதாக இத்தேச மக்கள் நிலையைப் பொறுத்தவரை சில விஷயங்களைக் கவனித்தல் நன்று.

மிக்க நாகரிகத்துடன், செல்வச் செருக்கால் செம்மாந்திருக்கும் தேசத்தினர்களின் இயல்பை ஆராய்ந்தால், அத்தேசத்தி லெல்லாம் இறப்பவர்களும், பிறப்பவர்களும், நூற்றுக்கு இத்தனை பேர் எனக் கணக்கிடில் மிகக் குறைவே. நம் நாடோ நாகரிகம் நிறைந்த நாடுகளெல்லா வற்றையும் விட அதிகமான இறப்பவர், பிறப்பவர் தொகையைப் பெற்றுள்ளது. இது மிகத் துக்ககரமான காரியம். சாதாரணமான நன்னிலையிலுள்ள மக்களிடையே, பொருள் நூல் வல்லுநர் முடிபின்படி, பிறப்பவர் தொகை ஆயிரத்துக்கு நாற்பத்தைந்துக்கு மேலும், இறப்பவர் தொகை பதினைந்துக்கு மேலும் சராசரி கணக்குப் பார்ப்பின் இராது. இந்த எண்கள் சிறிது அதிகமாகவே எடுத்துக்கொள்ளப் பட்டவை. இந்தியாவிலோ சராசரி பிறப்பவர் தொகை கிட்டத்தட்ட ஆயிரத்துக்கு 43·2. மிக உயர்ந்த எண்ணிக்கை 45 எனக்கொள்ளின் நம் நாடு இவ்விஷயத்தில் பின்னடைந்திருப்பதாகக் காணேம். இறப்பவரின் மிகக் குறைந்த தொகை ஆயிரத்துக்குப் பதினைந்தெனில், நமது தேசத்திலோ இரண்டரை மடங்குக்கு மேல் அதிகமாயிருக்கிறது. ஆகவே,

இந்தியமக்கள் மிக அதிக மக்கட் பேற்றாலும், மிக அதிக மரணத்தாலும் துன்புறுகின்றனர் என்பது வெளிப்படை. இந்தியாவில் மிகக் கொடிய நோய்கள் பல சமூகத்தை உண்ணுகின்றன என்பதை, பெரிய நகரங்களின் ஜனன மரணக் கணக்கிலிருந்து தெரிந்துகொள்ளலாம். சிறு குழந்தைகளின் சாவும் (சிசுமரணமும்) தாய்மார்களின் மரணமும் இத்தேசத்தில் மிக அதிகமாயிருக்கின்றன. இறப்பவர், பிறப்பவர் இருவரின் தொகையும் அதிகமாயிருப்பதனால் மக்களின் வாழ்நாள், தேகஆரோக்கியம் முதலிய பல இன்றியமையாச் சௌகரியங்களுக்கு இடையூறுகள் பல உண்டாகின்றன.

பல காரணங்களால் அநேக முன்னேற்ற நாடுகளில் இறப்பவர் பிறப்பவர் இருவர் தொகையும் மிகக் குறைவாயிருக்கிறது. நம் நாட்டினர் "பிள்ளைப் பேறு" என்னும் விஷயத்தில் போதிய அறிவுடையராக இருக்கவில்லை என்பது மிக வருந்தத் தக்கதொன்றாகும். ஆண் மகனெனின் 15 அல்லது 16 வயது ஆவதன் முன்னேயே அவனுக்கு மணவினை முடித்துவிடுகிறார்கள். பெண்ணெனிலோ பெரும் பாவம்! கலியாணமென்பதின் பொருள்கூடத் தெரியா இளம் பருவத்தே வாழ்க்கைத் தெப்பத்தில் பிணைக்கப்பட்டு விடுகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் பட்டினத்துப் பிள்ளையார் என்னும் பேரறிஞரின் செய்யுளொன்று ஞாபகத்துக்கு வருகிறது. அச்செய்யுள் வருமாறு :—

"நாப் பிளக்கப் பொய்யுரைத்து
நவநிதியந் தேடி.
நலமொன்று மறியாத
நாரியரைக் கூடி
பூப்பிளக்க எழுகின்ற புற்றீசல்போலப்
புலபுலெனக் கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற் கும்வகை யறியீர்
கைவிடவும் மாட்டீர்
கவட்டுத் தொன்மரத் திடுக்கிற்
காலுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்திட்ட குரங்குபோல
அகப்பட்டீர் கிடந்துழல
அகப்பட்டீரே."

இச்சிறிய மொழியில் உலக அநுபவம் ததும்புவதைக் காணலாம். எவரேனும் இதைவிடச் செம்மையாக உலக நிலைப் படம் எழுதக் கூடுமோ ?

இந்தியாவில் மிகச் சிறிய வயதிலேயே கலியாணமென்னும் கயிற்றாற் கட்டுண்டு மீளாத் துன்பத்துக்கு ஆளாய் வருந்தும் மக்கள் எண்ணிலர். நீண்ட நாட்களாக நமது சமயங்களில் ஆண் மகவுப்பேறு அவசியமெனவும், தநயனில்லாத் தம்பதிகள் "புத்" என்னும் நரகில் விழுவரெனவும் கூறியுள்ள எண்ணங்கள் மக்களிடையே வேரூன்றி இருக்கின்றன. தான் ஒரு குடும்பத்தைக் காக்கத்தக்க சௌகரியமும், பொருள் வருவாயும், தேக நலனும் தனக்கு இருக்கின்றனவா என்பதை, விவாகம் செய்துகொள்ளப்புகுவோன் சிறிதும் சிந்திப்பதில்லை. அன்றி எவரேனும் இவ்விஷயங்களைப் பற்றிக் கேட்பின் "எல்லாம் எனையாளு மீசன் செயல்" "கரும பலன்படி நடக்கும்" "மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான்" எனப் போலி வேதாந்தம் பேசப் புகுகின்றார்கள். மணமகனுக்கு விருப்பமில்லையெனினும், வீட்டில் நமன் வருகையை நாடோறும் பார்த்திருக்கும் பாட்டி முதலியோருக்கு விளையாடுவதன் நிமித்தம் உயிர்ப்பொம்மையொன்றைப் பெற்றுக்கொடுத்தல் அவசியமென எண்ணவேண்டிய சந்தர்ப்பங்கள் பல. கலியாணமென்பதன் வாசனையைக்கூட அறியாத, பால்மணம் மாறாப் பச்சிளம் பெண்களை, மனை வாழ்க்கைத் துணையாக இருக்கும்படி செய்து, குழந்தை பெறும் கருவிகளாக நம் நாட்டினர் செய்யின், அவர்களை அறியாதவர்கள் என்கோ ? அன்றி அன்பிலிகளென்கோ ? அல்லது பெரும் பாவிகளென்கோ ?

ஆடவர்களும் பெண்களும் அதிபாலியர்களாய், காதலின் விசித்திரங்களை அறியாதவர்களாய், அறிவும் குறைவாக உடையவர்களாய் இருப்பின் "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதாம்" இன்பம் பெறுவதெங்ஙனம் ?

இக்காரணங்களால் நம் நாட்டுப் பெண் மணிகள் மிகச் சிறிய வயதிலேயே நோய்வாய்ப்பட்டுப் பேரின்ப வாழ்வை நாடிச் செல்லுகின்றனர். அநேக தாய்மார்கள் பல குழந்தைகளைப் பெற்று மறலி மடியில் வாரிக் கட்டிக்கொடுத்து விட்டுப் பெருந் துயருறுகின்றார்கள். பிறக்கும் மக்கள் தொகையும் இறக்கும மக்கள் தொகையும் அதிகமாயிருப்பதை நோக்கில் எத்தனை தாய்மார் ஈரைந்து மாதம் வருந்திப் பெற்ற இன்னிளங் குழவிகளை இழக்கின்றனர் என்பது புலப்படும். பேதை அல்லது பெதும்பைப் பருவத் தாய்மார் பலர் குழந்தைப் பேற்றின்போது உயிர் துறக்கின்றனர்; அல்லது பிணியால் வருந்துகின்றனர்; தேக துர்ப்பல காலத்தில் குழந்தைகளைப் பெறின் பலஹீனமான பல ஜீவன்களை உலகில் பரப்புகின்றனர்.

உலக வாழ்க்கையை உள்ளபடி அறிந்துள்ள மேல் நாட்டினர் பலர் இவ்விஷயத்தில் மிக நன்ருக நடந்து கொள்ளுகின்றனர். அந்நாடுகளில் எவனும் தான் குடும்பத்தைச் சரியான நிலையிலிருத்திப் போஷிக்கச் சக்தனென நன்கு அறிந்த பிறகே மணம் செய்து கொள்ளுவான். பெரும்பாலும் மிகச் சிறிய வயதில் விவாகம் செய்து கொள்ளுவதில்லை. காலந் தாழ்த்து மணப்பதால் குழந்தைகளின் எண்ணிக்கையும் குறைவுபடுகின்றது. அந்நாட்டுப் பெண்மணிகளும் மேலும் மேலும் சமூகத்துறைகளிலும், அரசாங்கத்துறையிலும் பெரிய தொண்டுகள் செய்ய முற்பட்டு அதில் ஈடுபட்டு இருக்கிருர்கள். பல குழந்தைகட்குத் தாயாகி அவைகட்கான பல வேறு காரியங்கள் செய்யும் பொறுப்பை அவர்கள் பாராட்டுவதில்லை. மேலும் தம் குடும்ப வாழ்க்கையின் அமைப்பு நிலையை ஓர் அளவுக்குக் கீழே போகாமல் வைத்திருக்க வேண்டுமென்னும் ஆர்வம் அவர்கட்கு மிக அதிகமாக இருக்கிறது. அம்மாதிரியான வாழ்க்கை அமைப்பு நிலை (Standard of life) யைப்பற்றிய எண்ணங்கள் "கர்ப்பத் தடை முறைகள்" (Methods of Birth Control) பலவற்றைக் கையாளுமாறு ஊக்குகின்றன. இத்தியாதி காரணங்களால் அவர்கள் அதிக மக்களைப்பெறுவதுமில்லை; அவைகளைப் பறிகொடுத்து அலறித் துயருறுவதுமில்லை. எனவே, அவர்கள் மிக நல்ல தேக நலனுடன் நீண்ட நாள் இன்பமாக வாழுகின்றார்கள். என்னே! அவர் அறிவின் ஆட்சி! அறிவுடையார் எல்லாம் உடையார்.

இந்திய ஜனத்தொகை, உலக மக்களின் மொத்தத் தொகையில் ஐந்தில் ஒரு பங்காகும். சில நகரங்களிலும், சில விவசாய நாட்டுப் பகுதிகளிலும் ஜன நெருக்கம் (Density of population) மிக அதிகமாக இருக்கிறது. வேளாண்மைத் தொழிலினர், ஒரு சதுரமைல் பரப்புப் பிரதேசத்தில் 250 பேருக்கு மேலிருப்பின் கஷ்டப்பட வேண்டியிருக்குமென்பது மேல் நாட்டுத் தேச அநுபவ சித்தாந்தம். நம் நாட்டிலோ சில விவசாய ஜில்லாக்களில் சதுரமைலுக்கு 600 பேருக்கு மேலிருக்கின்றனர். நாகரிக நாடுகள் எல்லாவற்றுள்ளும் நம் நாட்டில்தான் பெரும்பாலான மக்கள் விவசாயத்தைத் தமது ஜீவாதாரத் தொழிலாகக் கொண்டுள்ளனர். வாணிபம், கைத்தொழில்கள் முதலிய தொழிலினர் மிகக்குறைந்த தொகையினரே.

வேளாண்மைத் தொழிலினர் நூற்றுக்கு 71 பேர். அத்துடன வேட்டையாடல் முதலிய தொழிலினரைச் சேர்த்தால் நூற்றுக்கு 73 பேராகும். கைத்தொழிற்சாலையிலும், வேறிடங்களிலும் தொழில் செய்து பிழைப்பவர் நூற்றுக்குப் பத்துபேர். அதில் நூற்றுக்கு ஒருவர் வீதம் தான் கைத் தொழிற்சாலைகளில் (Organised industries) வேலை செய்வோர். வியாபாரத்திலீடுபட்டோர் நூற்றுக்கு ஆறுபேர். பண்டங்களை இங்குமங்கும் கொண்டுபோகும் தொழிலில் (Transport) உள்ளவர்கள் நூற்றுக்கு இருவர். அரசாங்க வேலை

யிலும், நாட்டுப் பாதுகாப்புத் துறையிலும், (Administration and protection of the country) இருப்பவர் நூற்றுக்கு ஒன்றரைப் பேர். ஏனையோர் பலர் விவசாய சம்பந்தமான பல வேலை செய்பவர்.

அதிகப்படியான மக்கள் மேல் நாட்டிலிருந்தால் அவர்கள் பலவேறு வகையாலும் அக்கஷ்டத்தை நிவர்த்தி செய்துகொள்ளுகின்றனர்; வேறு தேசங்களில் குடிபுகுகின்றனர்; அந்நிய நாட்டு வியாபாரத்தில் நுழைகின்றனர்; ஏழைத் தேசங்களின் பொருளெனும் உயிரை ஈர்த்துச் செல்லுகின்றனர். துர்ப்பாக்கிய வசமாக நம் நாட்டிற் பிறந்தோர் இங்கேயே இருந்து வருந்தி மடிய வேண்டுவதுதான். வேறுநாடுகளுக்குச் செல்வோமென நினைக்கும் போதே துன்பங்கள் பல தொடருகின்றன. நம்மைப் படைத்த பிரமன் நமக்கு வெண்ணிற உடலைக் கொடாததே நாம் பல கஷ்டங்களுக்கு உட்படவேண்டுமென்பதைக் காட்டுகிறது. எனவே, மேல் நாட்டில் அதிகப்படியான மக்கள் செய்து கொள்ளும் சௌகரியங்கள் நமக்கு முயற் கொம்புகளாகின்றன. ஜனவிருத்தியோ மிக அதிகமாகிக் கொண்டே வருகிறது. பொருள் விருத்தியோ அல்லது சௌகரிய விருத்தியோ நம்மைப் பகிஷ்காரம் செய்கின்றது. எனவே, நம் நாட்டு மக்கள் வேளாண் தொழிலிலேயே தம்வாழ்நாளைச் செலவிட முயலுகிறார்கள்; ஓராண்டில் பலநாட்களில் செய்வதற்கொரு வேலையுமின்றி வீண்பொழுது போக்குகிறார்கள்; மிடிவாய்ப்பட்டு வருந்துகிறார்கள். நிலவருமானம் மிகக் குறைவு. அதை நம்பியிருப்போர் பலர். எனவே துக்க விருத்தி.

நமது நாட்டில் 'விசும்பிற்றுளி வீழினல்லான் மற்று ஆங்கே, பசும்புல் தலை காண்பரிது' நம் நாட்டுச் செழிப்பு மழை, ஜலவசதி இவைகளைப் பொறுத்ததாக இருக்கிறது. பருவப் பெயர்ச்சிக் காற்று சரியாக, இருப்பின் நாடு செழித்துப் பணம் மலிந்திருக்கும். இல்லையேல் பஞ்சம் ஏற்படல் நிச்சயம். பொய்யாமொழியார் "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து, உள்நின்று உடற்றும் பசி" என்று கூறியுள்ளது நம் நாட்டின் சிறப்பணியாகும். எனவே, நம் மக்களில் பெரும்பான்மையோர் வேளாண்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனரெனின், அவர்களின் வாழ்க்கை நலன் எவ்வளவு அநித்தியம், நிலையற்றது, குறைந்த காலவரை யறையுட்பட்டது என்பது தெள்ளிதில் புலனாகும். 1880-ம் வருஷத்துப் பஞ்ச விசாரணைக் கமிட்டியார் இவ்விஷயத்தைச் சாங்கோபாங்கமாகத் தெரிவித்துள்ளார். இந்திய மக்களின் வறுமைக்கும், சிறிய அசந்தர்ப்ப காலத்தும் பெரிதும் வருந்த வேண்டிய நிலைமைக்கும் பெரிய காரணம் பெரும்பாலான இந்திய மக்கள் விவசாயத்தையும், பருவகாலத்தையும் நம்பியிருப்பதுதான் என்பதை அக்கமிட்டியார் விவரமாகக் கூறியுள்ளார்.

இம்மாதிரியான தாழ்ந்த பொருளாதார நிலையை அறிய ஒரு கருவியுண்டு. பெரும்பாலும் நகரங்களும், பட்டணங்களும் கைத்தொழிலிலும், வாணிபத்திலுஞ் சிறந்துள்ளன. நம் நாட்டில் நூற்றுக்குப் பத்துபேரே பட்டணங்களில் வசிக்கின்றனர். ஏனையோர் கிராமங்களில் வசிக்கின்றனர், இதிலிருந்து நம் நாட்டில்தொழில் துறைகளில் ஈடுபட்டவர் மிகக்குறைந்த தொகையினரே என்பது அறியக் கிடக்கின்றது. கிராமங்களிலேயே பெரும்பாலரும் இராமல் பட்டணங்களிலும் கிராமங்களிலும் ஜனங்கள் விரவி வசிக்கவேண்டுமெனின் இந்நாட்டின் வாணிபம், கைத்தொழில் முதலியவை மிகவும் மேம்பட வேண்டும். சீக்கிரம் விருத்தியாக வேண்டும்.

நமது நாட்டில்
அமிதமான மக்கள் உளரா ?
(Is India over-populated)

ஒரு நாட்டில் பொருள் உற்பத்தி (Production) விவசாயம் இவைக

ளெல்லாம் மிக உன்னத நிலையிலிருப்பினும் அளவுக்கு மேற்பட்ட மக்கள் இருப்பின் சௌகரியமாக, வாழ்க்கை நலன்களுடன் இருத்தல் முடியாது. பொதுவாக மக்களின் எண் அதிகமானால் வேலைசெய்து பொருள் விருத்தி செய்பவர்கள் அதிகப் படுவார்கள்; பொருள் விருத்தி அதிகமாகும்; சுகம் அதிகரிக்கும் எனக் கொள்ளப் படும். ஆனால் ஒரு காலத்துக்குப்பின், பொருள் விருத்திசெய்யும் முறைகளும் சௌகரியங்களும் மாறுப விருக்குமானால், ஜனங்கள் விருத்தியாகும் அவ்வளவு அதிகம் பொருள் விருத்தியாகாது குறைவுபடும் நிலைமை உண்டாகும். ஜனங்கள் விருத்தியாகி அதற்கேற்பப் பொருள் விருத்தியாகாத நிலைமை சில நாட்டில் உண்டு. பொருள் விருத்தியின் தொகை குறைந்த வேகத்துடனும் மக்கள் விருத்தித் தொகை அதிக வேகத்துடனும் போனால் இன்பம் குறைவுபடும். ஆகவே, ஒவ்வொரு தேசத்திலும் மக்கள் விருத்தியைவிடப் பொருள் விருத்திகுறைவுபடக்கூடாது. அப்படிக் குறைவுபட ஆரம்பித்தால் அந்த நாடு அதிகப்படியான மக்களைப் பெற்றுள்ளது என முடிவுசெய்யவேண்டும். அதை அமித மக்கள் நிலை எனக் கூறலாம் (over popu lation.)

நம் நாட்டில் மக்கள் அமிதமாயிருக்கின்றனரா அல்லவா என்பதைப்பற்றிப் பல வேறுபட்ட அபிப்பிராயங்களிருக்கின்றன. சிலர் இந்திய ஜனத்தொகை அதிகமல்ல; நாட்டு வளத்தைச் சீர்திருத்தினால், பொருள் உற்பத்தி முறைகளை மாற்றினால், இன்னும் அதிகமான ஜனங்கள் சௌகரியமாக இருக்கக் கூடும்; இப்போதைய கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் பொருளை மக்களிடம் செம்மையாய்ப் பகர்ந்திடாமையே (Distribution) என்றெல்லாம் கூறுகின்றனர். இறந்த காலத்தில் (In the past) பொருள் விருத்தி அதிகப்பட்ட விடங்களில், மக்கள் வாழ்க்கை முறைகள் விருத்தியடைந்து மேம்படவில்லை. பெரும்பாலும் அதிகப்படியான பொருள் வருவாய் ஜனத்தொகையை அதிகப்படுத்தி யுள்ளதே யொழிய மக்கள் வாழ்க்கை நலனை (Standard of life) விருத்தி செய்யவில்லை. பஞ்சாபில் கால்வாய்க் குடியேற்ற ஜில்லாக்களில் (Canal colonies) சிறிய தொகையினர் பெருஞ் சௌகரியங்களுடன் ஆரம்ப காலத்திலிருந்தனர். இப்போது வருவாய் மிக அதிகமாகாவிடினும் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. கூடிய சீக்கிரம் மேட்டூர் அணைப்பாசனப் பிரதேசங்களில் இம்மாதிரியான நிலையைக் காண்போம். எனவே, இந்தியமக்கட்பான்மை பிழைப்பு வழிகளை வருத்துதலே யாகும். உயிரை உடலில் காப்பதற்கான ஜீவன வரும்படி வரும்வரை மக்கள் இந்தியாவில் விருத்தியாகி வருகின்றனர் என்பது அறியக் கிடக்கின்றது. புது நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்படின் அந்தப்பகுதிகளில் ஜனத்தொகை மிகத் துரிதமாக அதிகரிக்கின்றது. எல்லாரும் மணத்தாலும், பால்ய விவாகம் அதிகமாயிருப்பதாலும், அதிரூரின் முறைகளைக்கொண்டு ஜனப் பெருக்கைத் தடுக்காததாலும், ஜனத்திரள் அதிகமாகி, விவசாய வரும்படி விருத்தியைவிட வேகமாகப் பெருகி, கஷ்டத்தை உண்டாக்குகின்றது.

அதிக ஜன நெருக்கம் (முக்கியமாக விவசாயஜில்லாக்களில்) பணப்பெருக்கு, திடீரென அதிகரித்த இடங்களில் ஜனப்பெருக்கும் துரிதமாயும் அதிகமாயும் இருக்கிற தென்னும் உண்மை, மற்ற தேசங்களின் அநுபவத்தால் பிறப்பவர் இறப்பவர் எண் அதிகமாக இருந்தால் தாழ்ந்த வாழ்க்கை நிலைக்கு அறிகுறி என்னும் விஷயம் இவைகளையெல்லாம் கவனித்தால், இந்தியாவில் பொருள் விருத்தி வேகத்தைவிட ஜன விருத்தி அதிக துரிதமாய் இருக்கிறது. இம்மாதிரியான கஷ்டமிரா விட்டால் ஜனங்களின் சுகம் இன்னும் அதிகமாக இருக்க முடியும் என்னும் விஷயங்கள்

உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெள்ளிதில் தெரிகின்றன.

இயற்கையின் தன்மையைக் கவனிப்போமானால்எந்தச்சமூகத்திலும் ஜனங்கள் அறிவின் பாற்பட்ட முறைகளால் மக்கட் பெருக்கைத் தடுக்காவிட்டால் பிறப்பு அதிகமாகும். இயற்கையின் தன்மை சில விஷயங்களில் சிறந்ததாயும், சிலவற்றில் கொடியதாகவும் இருக்கிறது. இயற்கையின் முறைகள் இவ்விஷயத்தில் மிகப் பயங்கரமானவை. நாமே அவசியமானபோதெல்லாம் கர்ப்பத்தடை, இல்வாழ்க்கையிலும் மிதமான இன்ப நுகர்ச்சி, சரியான பிரமசரிய பாதுகாப்பு முதலிய முறைகளை அநுஷ்டிக்க வேண்டும். இல்லையேல் இயற்கையானது கொடுநோய்கள், பஞ்சம், யுத்தங்கள் முதலிய நினைவாய்க் கொடுங்கூர் ஆயுதங்களைச் சனங்களின்மேல் பிரயோகிக்கின்றன. அப்போதுதான் பிறப்போர், இறப்போர் எண் அதிகமாகிறது; துக்கம் மிகுகின்றது; நோய் அதிகரிக்கின்றது; சுகம் குறைகின்றது.

நல்ல தடை முறைகளை அநுஷ்டியாமையாலும், ஜனப் பெருக்குச் சக்தி (Fecundity) பலினத்துவம் அதிகமாயிருப்பதாலும், பொருள் விருத்தி அதிகமாக விருத்தியாகாமையாலும் இந்தியாவில் அமித ஜன மிருக்கிறதெனப் பேராசிரியர்கள் ஜாதார், பேரி என்பவர்கள் எண்ணுகின்றனர்.

பேராசிரியர் கேல் என்பவர் இந்தத் தேசத்தில் தற்போதுள்ள தொழில் முறைகள், நிலைமை இவைகளையும், ஜனத் தொகையையும் கவனித்தால் அமித ஜனமுண்டெனக் கூறவேண்டியிருக்கிறதென்கிறார். ஆனால் தொழில் முறைகளையும், பொருளுற்பத்தியையும் அதிகரிக்கச் செய்து ஜனவாழ்க்கை நலனையும் அதிகப்படுத்தல் கூடும் என்றும் அவர் கூறுகிறார்.

பேராசிரியர் ஜெவான்ஸ் (Prof. H. S. Jevons) என்பவர், இந்திய மக்களின் பொருளாதார நிலையை அதிகரிக்கச் செய்து, சராசரி தலைவீதம் வரும் வருமானத்தை விருத்தி செய்ய வேண்டுமானால், இந்தியக்கைத்தொழில்களெல்லாவற்றையும் கூடிய சீக்கிரம் மிகத் துரிதமாக விருத்தி செய்ய வேண்டும்; ஜனப் பெருக்கின் வேகத்தைவிட கைத்தொழில் விருத்தி, பொருள் நிலை விருத்தி முதலியவைகள் வேகமாகப் பெருக வேண்டும் என்று கூறுகிறார். இன்னும் அதிக மக்கள் கூட இந்நாட்டில் சௌகரியமாக இருக்கக்கூடும். அதற்குப் பொருள் வருவாய்கள் விருத்தி யடையவேண்டும். வேளாண்மையில் கூட பலவேறு பட்ட விருத்திகள் செய்யவேண்டும். வேளாண்மை முறைகளும் பாசனம் முதலியவைகளும் இன்னும் செம்மையுறவில்லை. பொருள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதோடமையாது, பலவேறு பகுப்பினரான மக்களிடையே அப்பொருள்கள் செம்மையாய்ப் பங்கிடப் படவேண்டும். அப்போது மக்களின் சுகம் சுரக்கும். சில ஜில்லாக்களில் அதிக ஜன நெருக்கமும், சில இடங்களில் மிகக் குறைந்த ஜனமும் இராமல், இப்போதிருப்பதைவிட சிறந்த முறையில் விரவிப் பரவி யிருக்கவேண்டும். அவசியமானபோதெல்லாம் அயல் நாட்டுக் குடியேற்றம் தலை யெடுக்கவேண்டும். அதற்கேற்ற சௌகரியங்கள் செய்யப்படவேண்டும். இவைகளும் இவைகளைப் போன்ற வேறு முறைகளும் அநுஷ்டிக்கப்பட்டால் இந்திய மக்கள் இன்னும் அதிகமாகச் சுகமாக இருக்கக்கூடும் என்பது அப்பேராசிரியரின் கருத்து.

இந்தியாவின் இம்பீரியல் கெஜட்டியரின் பதிப்பாளர்களுள் ஒருவரான திரு. இ. ஏ. கெய்ட் என்பார் கீழ்வருமாறு கூறுகிறார்: "விவசாயத்தை யல்லாத ஏனைத் தொழில்களின் முக்கியம் வலுத்து வருகிறது. எனினும் விவசாயத்திற்கூட இன்னும் எவ்வளவோ திருத்தங்கள் செய்யப்பட வேண்டும்; செய்யக்கூடும். சாஸ்திரீய முறைகளை வேளாண்மையில் அநுஷ்டிக்க வேண்டும். தற்போதுகூட பர்மா முதலிய பிர

தேசங்களில்விருத்திசெய்யப்படவேண்டிய பாகங்கள் உள. மேற்புற ராஜபுதனம்போன்ற பக்கங்கள் பாசனவிருத்தி செய்யப்படின் பயிரிடற் கேற்ற நிலங்களாக மாறக்கூடும்'' என்பதே.

எனவே, இந்திய மக்களைப்பற்றி நாம் அறியும் விஷயங்கள் பல. அவர்களது பொருள் நிலை தாழ்மையாயிருக்கிறது; சுகம் குறைவாயிருக்கிறது; பிணி, சாக்காடு முதலியவை அதிகமாயிருக்கின்றன. இவைகளுக்குக் காரணங்கள் வாழ்க்கை முறைகள்; பெரும்பாலான மக்களின் அறியாமை; தொழில் துறைகள் விருத்தியின்மை முதலியன. நம் நாட்டு மக்கள் இக்கஷ்டங்களை உதறித்தள்ளி, வீரர்களாய், திடசரீரிகளாய், நீண்ட ஆயுளினராய், பெருஞ் சுக வாழ்க்கை பெறக்கூடிய காரியங்களைச் சீக்கிரம் தொடங்குவார்களாக. நன்றும் இன்றே செய்க; இன்றும் இன்னே செய்க.

"இரும்பைக்காய்ச்சி உருக்கிடுவீரே!
யந்திரங்கள் வகுத்திடுவீரே!
கரும்பைச்சாறு பிழிந்திடுவீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப்பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப்புவிமேல்;
ஆயிரந்தொழில் செய்திடுவீரே!
பெரும்புகழ் நுமக்கே யிசைக்கின்றேன்
பிரமதேவன் கலையிங்கு நீரே!"

—பாரதியார்.

அறிவியலும் சமயமும்—
இவற்றின் தற்கால நிலை

[திரு - ஈ. த. இராஜேஸ்வரி அம்மாள், எம். ஏ., எல். டி.]

"பூதலய மாகின்ற மாயைமுத லென்பர் சிலர்; பொறிபுல னடங்கு மிடமே
பொருளென்பர் சிலர்; கரண முடிவென்பர் சிலர்; குணம் போனவிடமென்பர் சிலபேர்;
நாதவடி வென்பர்சிலர்; விந்துமய மென்பர்சிலர்; நட்டநடு வேயிருந்த
நாமென்பர் சிலர்; உருவமா மென்பர்சிலர்; கருதி நாடிலரு வென்பர் சிலபேர்;
பேதமற உயிர்கெட்ட நிலயமென் றிடுவர்சிலர்; பேசிலரு ளென்பர் சிலபேர்;
பின்னு முன்னுங் கெட்ட சூனியம தென்பர்சிலர்; பிறவுமே மொழிவரிவையால்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலால் பரமசுக நிஷ்டை பெறுமோ!
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணானந்தமே!"—தாயுமானுர்.

மனிதராய்ப் பிறந்தவர்களுக்குச் சிறு வயதிலிருந்து இச்சை யென்பது உடன் பிறப்பாய், உயிர்த் துணையாய் இருந்து வருகின்றது. இச்சை இருவகை. ஒருவகை, உடலைப் பற்றியது; மற்றொன்று, உடலுக்கு அதீதமாகச் செல்லுவது. உடலைப் பற்றிய இச்சையே உணவு முதலிய விஷயங்களில் செல்லுவது. மற்றொன்று உடல் வருத்தம் பாராது பெருங் காரியங்களிற் செல்லுவது. இவ்விருவகை இச்சைகளும் சாதாரணமாய் மனிதருக்கு இன்றியமையாதனவாம்.

இவற்றுள் முதலாவதான, தேக வழிபாட்டைக் கருதிய இச்சையின் நற்குணப் பெருக்கே, அறிவியலுக்கு அடிப்படையாம். அது எவ்வாறெனில், நமக்குப் பல்வகை உணவுப் பொருள்களில் உண்ண இச்சை உண்டாகும். அவற்றைப் பக்குவப் படுத்துவதற்குப் பாகசாஸ்திரம் ஏற்படுகின்றது. பதார்த்தங்களின் சுகாதார குணத்தை வைத்திய சாஸ்திரம் காட்டும். அவற்றைத் தக்க காலத்தில் பயிரிடுச் சேமிப்பதற்கு விவசாய சாஸ்திரம் வந்து நிற்கும். விளைந்த பண்டங்களை வியா

பாரத்திற்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யவும், கடற் பிரயாணம் செய்யவும், வானசாஸ்திரம் முதலிய அறிவியல் விருத்தியாகும் பண்டங்களினின்று சத்துக்கள், திராவகங்கள், உப்புகள் முதலிய பொருள்கள் எடுக்க ரசாயன சாஸ்திரம் உண்டாகும். தாவரப் பொருள்களிலுள்ள உயிருள்ள ஜீவராசிகளையும் அவற்றின் தத்துவங்களையும் கண்டறியப் பல்வகை அறிவியல் நூல்களும் சாஸ்திரங்களும் உண்டாயிருக்கின்றன.

நாம் உடுக்கும் உடை அவசியமானதன்றோ? பஞ்சை நூலாக்குவதற்கும், நூலை ஆடையாக்குவதற்கும், ஆடையை வெட்டிப் பல்வகை உடைகளாக்குவதற்கும், ஏற்ற கைத்தொழில்களையும் அவற்றிற்குரிய சாதனங்களாகிய யந்திரங்களையும் நியமிப்பதற்கும் அறிவியல் சாஸ்திரங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. நாம் கல்வி கற்பதற்கும் பல தொழில்கள் செய்வதற்கும் இன்றியமையாத தீபம் முதலிய மின்சார இயக்கங்களுக்கு ஒவ்வொரு துறையிலும் பல்வகை அறிவியற் கல்வி ஏற்பட்டிருக்கின்றன. இவற்றில் யாதேனும் ஒன்றைக் கற்பதற்கே ஒருவன் ஆயுள் முழுவதும் செலுத்துவானாயினும், அத்துறைக் கல்விக்கு அது போதுமென்று சொல்ல இடமில்லை. நமது தேகசுகத்துக்குத் தேடும் எவ்வகை விஷய சம்பந்தமான அறிவியற் கல்வி ஒவ்வொன்றும், மிக அற்புதமாகவே காணப்படுகின்றது. நாம் தாகத்தை அடக்குவதற்கு ஒரு காலணா கொடுப்போமாயின் "சோடா புட்டி" ஒன்று கிடைக்கின்றது. ஜலத்திலுள்ள தோஷம் நிவாரணம் செய்வதற்கும், கரிமல வாயுவை அத்துடன் கலக்க வைத்து ஒரு சீசாவில் பந்தம் செய்வதற்கும் எத்துணை அறிவியல் நூல்களின் தேர்ச்சி அவசியமென்பதைக் காணலாம். சக்கரைக் காய்ச்சும் பாக சாஸ்திரத்தில் வீணாய் அசுத்தமென எறியப்பட்ட கரிமல வாயுவை, இரும்பு ஜாடிகளில் அழுத்தி அடக்கிப் பல மணங்குகளை வேண்டிய அளவு உபயோகிக்க அளவுக் கருவியுடன் மிகவும் சுலபமான விலைக்கு நமக்குக் கிடைக்குமென்றால் இத்துறையிலுள்ள அறிவியல் சாஸ்திர அற்புதத்தை நாம் என்னென்று புகழ்வது! இக்காலத்தில் ககனமார்க்கத்திற் செல்ல விமானங்கள் ஏற்படுத்திய அறிவியல் இயக்கத்தை என்னென்போம்! இங்கிருந்த வண்ணமே பல்லாயிரம் யோசனைக்கு அப்புறம் பாடும் பாடல்களைக் கேட்கவும், பாடுவோனை அச்சமயத்திலே நேரே காணவும், அவன் ஆலாபனை செய்யும்போது உண்டாகும் முகக்குறிகளின் வேறுபாடுகளையும் நாம் காணவுங் கூடுமென்றால், அவற்றிற்குத் தக்க யந்திரங்களும் அவற்றில் ஒவ்வொரு பாகங்கள் செய்ய வேண்டிய கலைத் தொழில்களும் எத்தகையவென நாம் அளவிடக் கூடுமோ? இவ்வாறு இப்பிறவியில் நாம் இறவாது இத்தேகத்தையே ஓம்பத்தக்க அறிவியல் ஒன்றே இன்னும் வெளியாகாதிருக்கிறது. தற்கால இயக்கத்தை நோக்குங்காலத்தில் அதுவும் சில நூற்றாண்டுகளில் வெளியாகலாமென்பது திண்ணம். ஆகையால் வெளிமுகத்தில் இச்சை செலுத்துவது அறிவியல் இயக்கமாயின், நாம் அதைத் தகாதெனக் கூற இடமில்லை. நம்மாழ்வாரை, மதுரகவி "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்" என்றதற்கு, "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று விடை தந்தாராம். அதாவது அசேதனமான ஜடப் பொருளிடத்தில் அறிவுப் பொருளான சிறிய ஜீவன் உதிப்பானாயின், அவன் இயக்கம் எவ்வாறிருக்கும் என்பது வினா. அப்பொருள்களின் சம்பந்தமான சுகதுக்கங்களை அநுபவித்து அவற்றினிடையே கிடப்பானென்பது அவர் விடை. ஆகையால் இவ்வளவு அலட்சியமாகக் கூறிய விடையை, உற்று நோக்கின் மனிதனுடைய செய்கை அவ்வளவு எளனமாகக் காணப்படவில்லை. செத்தன என்பன யாவையும் உயிருள்ளனபோ

னும் ஒளி உள்ளனபோலும் ஒழுக்கம் பெறவைப்பது மனிதன் இயக்கமாயிருக்கின்றது. மூன்றுவகைக் குணங்களில் மனிதனுடைய குணம் இராஜசகுணமாயிருக்கிறது. அது தொழிலில் உழல்வதே சிறப்பிலக்கணமாய்ப் பெற்றது. நித்திரையில் போகும்பொழுது ஒன்றே தாமசகுண சம்பந்தமான மூடசுழுத்தியில் வீணாகின்றதன்றி விழித்திருக்கும் பொழுதெல்லாம்,

"உறுகயி றூசல் போல
வொன்று விட்டொன்று பற்றி
மறுகயி றூசல் போல
வந்துவந் துலவு நெஞ்சம்"

என்னும் அப்பர் திருவாக்குப்போல வெகு வேகமாகப் பல்வகைக் காரியங்களை மனிதன் செய்கின்றான். ஆயினும் எல்லாக் காரியங்களும் வீணா? ஒவ்வோர் அறிவியலும் அநாவசியமென்று சொல்லுவதற்கு இடமில்லை. உலகத்தில் இல்லறம் நடத்துவோர் இல்லையாயின் துறவிகள் துறவறம் நடத்த இடமிராது. ஆகையால் அறிவியலைப் பயன்படுத்துவது, ஆருயிருக்கும் இன்றியமையாததேயாம்.

அறிவியல் துறையில் உழன்ற மனமோ சலனமற்று நிற்பதில்லை. வேதனையில் ஆழ்ந்து வருந்துவதே காண்கின்றோம். உப்புநீர் குடித்தவனுக்குத் தாகம் மேலும் மேலும் எடுப்பதுபோல அறிவியல் துறையில் தாகம் அடங்குவதில்லை; திருப்தியாவதற்கு மிடமில்லை. அறிவியல் துறையில் திருப்தி என்றால் சோம்பல் என்று பொருளாம். ஆயினும் பெறக்கூடாத் திருப்தி யுள்ள நிலையை அடையவேண்டு மென்பது எல்லா மனிதர்களுக்கும் உள்ள ஒரு வகை இயற்கை அபேட்சையாம். அவ்வபேட்சை நீங்க முயலுவதே சமயமாகும். இதைத் தாயுமானவர்,

"மலைமலையாங் காட்சிகண்
காணாமை யாதி
மறப்பென்றும் நினைப்பென்றும்
மாயா வாரி
அலையலையா யடிக்கு
மின்பதுன்ப மென்றும்
அதைவிளைக்கும் வினைகளென்றும்
அதனைத் தீர்க்கத்
தலைபலவாஞ் சமயமென்றுந்
தெய்வ மென்றுஞ்
சாதகரென்றும் அதற்குச்
சாட்சி யாகக்
கலைபலவா நெறியென்றுந்
தர்க்க மென்றுங்
கடலுறுநுண் மணலெண்ணிக்
காணும் போதும்"

என்று விவரித்துக் காட்டியிருக்கின்றார். சமயங்கள் தேசத்துக்குத் தக்கவாறும் ஜனங்கள் அறிவுக்குத் தக்கவாறும் ஒழுக்கத்துக்குத் தக்கவாறும் பல்வகையாய் ஏற்பட்டிருக்கின்றன. வடமகா சமுத்திரத்தில் உருகாப் பனிக்கட்டி யிடையே இல்லம் கட்டி வாழும் எஸ்கிமோ வகுப்பினருக்குக் கொல்லாவிரத சமயமான ஜைனமதம் பயன்படுமோ? அவர்கள், குழந்தைகள் பிறந்தபோது, நமது நாட்டில் முதல் முதலில் தேனைத் தடவுவதுபோல அப்பனி நாட்டுக் குழவிகளுக்குக் கடற்சிங்கத்தின் கொழுப்பைச் சூட்டு வைப்பார்கள். இத்தேசவாசிகளுக்கு மாமிச பட்சணமன்றி வேறு பட்சணமே தெரியாது. இவர்களுக்குச் சைவ போதனை போதிப்பதில் யாதும் பயன் தராதென்பது திண்ணம். அம்மாதிரியாகவே தேசத்தாருக்குத் தக்கவாறு சமயகுரவர்கள் ஏற்பட்டனர். புராதன ஐரோப்பாவுக்குக் கிறிஸ்தவமும்; மத்தியகால ஆசியப் பிரதேசங்களுக்கு மகம்மதியமும், சீனர்களுக்கும் ஜப்பானியருக்கும் பௌத்தமும் பொருந்தி உலக வாழ்க்கையினின்று ; மேல் நோக்கக்கண் கொடுத்தன. ஆயினும் அச்சமயங்கள் உலகலட்சணமாவது யாது? அதில் உழலும் ஜீவர்கள் இலட்சணம் யாது? உலகக் கட்டினின்று ஜீவர்கள் உய்யத்தக்க மார்க்கம் எது என்பது ஆராய்ந்து, உடலை ஓம்பும் அறிவியல் நூல் போல் உயிரை ஓம்பத்தக்க அறிவியல் நூலை எழுதப்புகவில்லை. வேதங்களும் ஆகமங்களுமே அவ்

வாறு செய்யப் புகுந்தன. உலகெது? நானார்? எனது தலைவன் யார்? நான் அடைந்துற வேண்டிய காரணம் என்ன? பிறப்பறுக்கும் வழியாது? என்னும் ஆராய்ச்சி எடுத்தது வேத சம்பந்தமான மதங்களேயாம். இதை வைதிக நெறி யென்றும், அந்நெறி காட்டும் சமயத்தை வைதிக சமய மென்றும் கூறுவர். இதற்கும், உடலை யோம்பும் உலகியலான அறிவியல் சாஸ்திரங்களுக்கும் உள்ள பேத மாவது முக்கியமாய் மூன்றும். வெளி முகத்தில் ஜடப் பொருளின் குணம் கண்டு ஆராய்வது விட்டு ஜடப் பொருளுக்கு நமது இஷ்டத்துக்கு ஏற்றவாறு குணம் பெறச் செய்வது ஒன்று; இரண்டாவது பொருள்களின் பேதா பேதமும் அவற்றின் சேர்க்கையால் உண்டாகும் பயன்களைக் கண்டறியப் புகாமல் பதார்த்தங்களையே ஒன்றை மற்றொன்றுக்கு தக்க மனோசக்தி விருத்தியாக்கும் மார்க்கத்தைத் தேடுதல்; மூன்றாவது தமது துன்பம் நீங்குமாறு பிற ஜீவராசிகளின் துன்பத்தையும் நீக்க முயலுதல். இம்மூன்றும் வேத நெறி சமயத்தின் முன் நோக்கமாம். இதைத் தாயுமானவர்:—

"வேதமுடன் ஆகம புராணம் இதிகாசமுதல்
வேறுமுள கலைக ளெல்லாம்
மிக்காக அத்துவித துவிதமார்க் கத்தை
விரிவா எடுத்து ரைக்கும்; [யே
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
உண்டுபணு ஞானமாகும்;
ஊகம் அனுபவவசன மூன்றுக்கும் ஒவ்வும்
உபயவாதிகள் சம்மதம் [ஈது
ஆதலி னெனக்கினிச் சரியை யாதிகள் போ
யாதொன்று பாவிக்க நான் [னும்
அதுவாத லாலுன்னை நானென்று பாவிக்
அத்துவித மார்க்க முறலாம் [கின்
ஏதுபா வித்திடினும் அதுவாகி வந்தருள்
எந்தைநீ குறையு முண்டோ? [செம்
இகபர மிரண்டினிலும் உயிரினுக்கு யிராகி
எங்கும் நிறைகின்ற பொருளே!"

துவிதம் அத்துவிதம் என்னும் இருவகைத் தூயதத்துவ சமய வேறுபாட்டில் ஆரம்பத்தில் துவித பாவனையாக ஆரம்பிப்பதே ஞானவிருத்திக்கு இன்றியமையாதது என்பர்மேலோர். இதுச்சாயுஜ்யம் நீங்கலான ஏனைப் பதவிகளை அளிக்கும்வைணவ சித்தாந்தமாகும். வைணவ சமயத்தில் வைகுண்டத்தில் நித்திய சூரிகள் விஷ்ணுவடிவான பரம்பொருள் சமீபத்திலிருந்து அவரைப் போன்ற உருவம்பெற்றுத் "தூராத மனக்காதல் தொண்டர்"களாய்க், குழுமிப் பேரின்பம் அநுபவிப்பது வைணவமறைகளில் காணலாம். அகப்பொருளில், தலைவன் தலைவிச் சம்பந்தம் காட்டுவதுபோல் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் என்றும் நீங்காத பேரின்ப வாழ்க்கை உருவகமாய் இதில் காணப்படும். என் தந்தையார் எழுதிய "ஆண்டாள்" என்னும் கட்டுரையுள் இவ்வைணவப் பெருந்தகையின் சித்தாந்தம் மிகவும் நன்றாக வெளியாகும். ஆழ்வார்கள் பன்னிருவரில் ஆண்டாளானவர், நமது சமய குரவர்களில் முதல்வரான சம்பந்த சுவாமிகளின் தேவாரக் கருத்துக்களை ஆங்காங்கு எடுத்துரைப்பது போல் திருமொழிகள் கூறியுள்ளார். இதன்றியும் ஆண் பிள்ளைகளாய்ப் பிறந்த நமது சமய குரவர்கள் தலைவியாயும், இறைவன் தலைவனையும் அகத்துறையில் பாடும் அழகினும், பெண் பிள்ளையாய்ப் பிறந்த ஆண்டாள் தலைவியாயும், நித்திய பிரமசாரியாகிய கிருஷ்ண பகவானைத் தலைவனாயும் பாவித்துப் பாடுதல் அதிக சிறப்பாய் விளங்கலாம். துவிதமாவது தலைவன் தலைவி என்கின்ற இரண்டு பாவனை. இதையே, "சிவன்," "சக்தி" என்று நமது சமயத்தில் கூறப்படும். இவற்றின் மன ஒருமையே ஒருவகை அத்துவிதமாகும். முன்னிலை, தன்மை என்னும் பேதமற்று நின்ற மேன்மையே வீடென நமது சமயகுரவர்கள் விளக்கினார்கள். இதுவே, கல்லாலின் நிழலில்,

"அந்தணர் நால்வர்காண
அருட்குரு வாகிவந்த
எந்தையே யெல்லாந்
தானென்று இயம்பினன்"

என்பது. இதுவே மேலான சமயநெறி. எனவே, சமயமானது அணுவுக்கணுவி னிற்சென்று நிற்பதும், மகத்திற்கு மகத்தில் சென்று நிற்பதுமாம். அறிவியலோ இதில் சில பகுதிகளில் அளவைக்கு உட்பட்ட எல்லையில் உழைப்பதாம். ஆகையால் ஒன்றுக்கொன்று விரோதம் ஒன்றுமில்லை. இவ்விரண்டையும் ஒருங்கு சேர்த்து உலகத்திற்குப் பயன்படுத்தி வைப்பதே ஆன்றோர் கடமை.

சுந்தர சுலோசனை

[திரு. டி. ஆர். சாரங்கபாணி, எம். ஏ.]

(தொடர்ச்சி)

இதழ் 5.

கவலையற்றிரு

ஜயகுமார!

மதனகோபால் எனும் மாயப்பெயர் பூண்டு நீ ஈண்டு வந்திருப்பதை யான் அறிவேன். நீ எண்ணுவதுபோல் இது காலை நீ எடுத்துக் கொண்ட வழக்கு அவ்வளவு எளிதல்ல வென்பதை நீ யுணர்ந்திடு. நீ இவ்வழக்கில் தலையிடா திருத்தல் நினக்கு நலமாகும். உன்னுடைய மோட்டார் வண்டியின் எண்ணே உன்னைக் காட்டிக் கொடுத்து விடும் என்பதை நீ மறந்தனை போலும்.

சண்முகசுந்தரம்.

இக்கடிதத்தைக் கையிலேந்தி, ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து, காலை ஆறுமணிக்கு ஜயகுமாரன் தன்னுடைய அறையில் மீண்டுமொரு முறை இக்கடிதத்தை வாசித்தான். வாசித்ததும் புன்முறுவல் கொண்டான். தான் அமர்ந்த அறையின் கதவை நோக்கினான். சென்ற இரவு கள்ளனைப் போலுங் காருருவம் பூண்டு மோகன சுந்தரத்தினறையில் கடிதங்களைக் களவாடி அறையுள் போந்ததும் தாளிடப்பட்ட அக்கதவு, தாளுடன் விளங்குதல் கண்டான். அங்கிலையில் தாளிடப்பட்ட அறையுள் இவ்வதிசயக் கடிதம் வந்த தெங்ஙனமென யோசித்தான். அவனுக்கொன்றும் விளங்கவில்லை.

இரத்தினத் திருடில் பெரும் பெயரெடுத்த கருணாகரன் என்னும் பெருங் கள்ளனைப்போலும் அஞ்சாத நெஞ்சை சண்முகசுந்தரமும் பெற்றவனென்பது தெளிந்தான். (கருணாகரன் என்னும் மகுடந்தாங்கிய எம்முடைய துப்பறி நாவலை வாசிக்க இவ்விவரம் நனி விளங்கும்) சந்திர சேகரப் பிரபுவின் மெய்க்காதலியாகிய காந்தாவின் மைந்தனாகிய சண்முகம் இத்தகை அஞ்சா நெஞ்சுடைய கள்ளனாக மாறியது ஜயகுமாரனுக்கு ஒருவகையில் வியப்பையே ஈந்தது.

துப்பறி வீரசிங்கமெனக் கற்றோராலும் மற்றோராலும் பெரிதும் போற்றப்பட்டதனக்கு, அறநெறி துறந்து மறநெறிபற்றிய ஒரு பேதை, உயர்குலத்துதித்தும், அக்குலத்துக்குரிய நன்னெறி மறந்து, தூர்த்தருடன் கூடித் தீய ஒழுக்கம் பூண்ட ஒரு புல்லியன், தன்னுடைய திறனை யோராது தனக்குப் புத்திபுகட்டும்கடிதம்வரைந்ததென்ன, வெகுளிவிம்ம, "சண்முகசுந்தர! என்னுடைய திறனை வெகுசீக்கிரம் நீயுணர்வாய்; அவசரப்படாதே." என்று ஜயகுமாரன் தலையசைத் தியம்பினான்.

மீண்டு மொருமுறை கடிதத்தை நோக்கினான். சென்ற இரவு தான் களவாடிய கடிதங்களின் கையெழுத்தும், தன் கரத்திருந்த கடிதத்தின் எழுத்தும் ஒரே மாதிரியாக இருப்பது காண அகமகிழ்ந்தான். தன்னுடைய மேஜையின் அறையைத் திறந்து தான் களவாடிய கடிதங்கள் ஆங்கு இருக்கின்றனவா என நோக்கினான். அவைகள் வைத்த இடத்திலேயே இருப்பது கண்டு, தன் கரத்திருந்த கடிதத்தையும் அவைகளு

டன் சேர்த்து வைத்துப் பூட்டிவிட்டு அறையிலிருந்து வெளிச் சென்று உரிமை யுறையுளின் தோட்டத்தில் சிறிது உலவிவர எண்ணி நந்தவனத்துள் நுழைந்தான்.

ஆங்கு ஓர் அழகிய மேடையின் மீது தனித்தோர் இளமாது அமர்ந்து, வாடிய வதனத்துடன் ஆழ்ந்த யோசனையிலிருப்பதை ஜயகுமாரன் கண்டான். ஜயகுமாரன் வனத்துள் நுழைந்ததை அவள் கவனிக்கவில்லை. அவளுடைய வாடிய வதனத்தைக் கண்டதும் ஜயகுமாரனுடைய இளகிய மனம் உருகியது. அவளுடைய முகஜாடையினின்றும், அவ்வணங்கே சந்திர சேகரப் பிரபுவின் ஒரே புத்திரியாகிய சுலோசனையென்பதோர்ந்தான். உரிமையுறையுளை நண்ணியதிலிருந்து, அவளை நேரில் கண்டு அவளுடன் தனித்து வார்த்தையாடிச் சிலஉண்மைகளை யுணர்தல் வேண்டுமென அவன் எண்ணியதற் கேற்ப அவள் தனித்திருப்பதைக் கண்டதும், அவளுடன் வார்த்தை யாடுதற்கு அதே ஏற்ற சமயமென எண்ணி அவளருகில் சென்றான். ஜயகுமாரன் அருகில் நிற்பதையும் அவள் அறியவில்லை; திறந்திருந்த கண்களினின்றும் நீர் ஊற்றெனப் பெருகி வழிந்தது; மேகத்தான் மறைந்த முழு மதி போலும் அவளுடைய மதிமுகம் துயரமெனும் மேகத்தான் இருண்டு வாடி நின்றது.

பகலவன் தன்பொற் கதிர்களை வனத்துள் பரப்ப, வண்டினம் காலை மதுவுண்டு மயக்க மிகுந்து இசைபாட, புல்லினங்கள், கதிரவனை வரவேற்பதொப்ப, பண்ணிசைத்து, மரம் விட்டு மரம் ஓடியாட, குளிர்காற்று, இசைகளுடன் இயைந்து வீச, நன்மலர்ச் செடிகள் நறுமணம் கமழ, காலையின் பத்தை நுகராது, இயற்கையெழிலை எண்ணியும் நோக்கியும் அகமகிழாது, சுலோசனை துன்பக்கேணியி லாழ்ந்து, ஊனற்று உறக்கமற்று வாடுவதைக்கண்ட எக்கன்மனந்தான் கரைந்திடாது.

சுலோசனாவையணுகிய ஜயகுமாரன்,

"அம்மா சுலோசனா! நீ இவ்வாறு தனித்துஇருந்து வாடுவதற்குக் காரணமென்ன?" என்று வினவினான். ஜயகுமாரனுடைய குரலோசையைச் செவிமடுத்ததும்சுலோசனை திடுக்கிட்டெழுந்தாள். தன்முன்னர்த் தன்னுடைய தந்தை சந்திரசேகரப் பிரபுவின் உயிர்த் தோழராகிய மதனகோபால் என்னும் வர்த்தகர் நிற்பது கண்டாள்; அவளுடைய நா பேச எழவில்லை. வருத்தமும் வியப்பும் ஒருங்கே வாட்ட மதனகோபால்எனும் மாறுபெயர்பூண்ட ஜயகுமாரனை நோக்கினாள். அவளுடைய உள்ள நிகழ்ச்சிகளை உற்றுணர்ந்த ஜயகுமாரன்,

"அம்மா! உம்மைவாட்டி நிற்கும் அல்லலை யானுணர்வேன் எனக் கூறின் அஃதுனக்குப் பெரும் வியப்பையளித்திடும். கல்விப்பேறு வாய்க்கப் பெற்ற நீ ஆபத்தாற்ற காலத்தில் அளவு கடந்து இவ்வகையில் வாடுவதங்கல் நன்றன்று. வீரத் தாய்மார்கள் மலிந்த தமிழகத்தில் நீ பிறந்தவளல்லவா? மனதைத் திடஞ்செய்துகொள்."

"மதனகோபலரே! என்னை வாட்டும் இடுக்கணை நீர் உணர்வீரா?"

"ஆம் உணர்வேன்"

"தந்தை உம்மிடத்தி லியம்பினார் போலும்."

"ஆம்."

"மதன கோபாலரே! என்னிலைமையில் நீரிருந்தால் என்னை வதக்கும் துயரின் இயல்லை யோர்ந்துணர்வீர்."

"அம்மா! சுலோசனா! உன்னுடைய நிலைமையில் நில்லாமலே உன்னுடைய துயரை உய்த்துணரும் ஆற்றலை ஆண்டவன் எனக்கு அளித்துள்ளான். சிந்தித்தெழுவார்கள் சிந்தையுளே திகழ்ந்தெழுந் தயாபரன் உன்னுடைய துயரையொழிக்கும் வன்மையையும் எனக்களிப்பன் என்பதற்கோர் ஐயமுமில்லை. ஆனால் சுலோசனா! நான் உனக்கு உதவி புரியவேண்டின், சில விஷயங்களை நீ என்னிடம் ஒளியாது

கூறவேண்டும். அவை உன்னுடைய இரகசியமாக இருத்தலாகும். ஆனால் உன்னுடைய நலனைக் கருதி, வீண் பழி தாங்கும் ஓர் இளைஞருடைய நலனைக் கருதி உண்மையை ஒளியாது என்னிடத்தில் உரைத்திட வேண்டும். பெரிய வியாபாரத் துறையில் வாழும் யான் எம்முறையில் உனக்கு உதவி புரியவொல்லும், என நீ எண்ணலாகும். ஆனால் நீ உண்மையை புணர்ந்தால்....''

“மதனகோபாலரே! இத்தனை யாண்டுகளில்லாது திடீரென நீர் என்னுடைய தந்தையின் பழைய நண்பராக வண்டு வந்து தங்கிய தேனக்கு முதலில் சிறிது சந்தேகத்தையே விளைவித்தது. உம்முடைய உரைகள் என்னுடைய சந்தேகத்தையே வலியுறுத்துகின்றன. நீர் கூறியதிலிருந்து நீர் உண்மையில் மதனகோபால் என்னும் வியாபாரியோவெனச் சந்தேகிக்கவும் இடமேற் படுகின்றது. நீர் எனக் கருளிய இதமொழிகளை எண்ணுந்தோறும் என்னுடைய தாளவொண்ணாத்துயர் உம்மால் ஒடுங்கினும் ஒடுங்குமென்னும் நம்பிக்கையும் எனக்கு வருகின்றது. நண்பரே! எனக்குத் தெரிந்தவைகளை ஒளியாது உமக்கியம்பிடுமாறு இயற்கை என்னைத் தூண்டுகின்றது. அன்பரே! நீர்யார்? உம்மை உற்று நோக்க உம்முடைய வதனம் இயற்கை வதனமாக எனக்குப் புலனாகவில்லை. அவ்வெண்ணந் தவறாக இருப்பினும் இருத்தலாகும்.''

“அம்மா சுலோசனா! வியந்தேன் உன்னுடைய நுண்ணறிவை. நீ எண்ணியது ஒரு வகையில் உண்மைதான். யான் பொய் வேடம் புனைந்துளேன் என்பதும் மெய்ம்மையே. ஆனால் அவ்வேடங் களைந்திடின், நீ என்னையாரென அறிந்திடுவையோ?'' என்று கூறிக்கொண்டே தன்னுடைய பொய் மீசையை எடுத்தான்.

“ஆ! ஜயகுமாரரே!! மதனகோபாலென்னும் பெயர் பூண்டெங்களை வஞ்சித்தவர் நீர்தானா? உம்மிடம் நேரில் வர யான் பன்முறை எண்ணியதுண்டு. உமக்குக் கடிதம் விடுத்தேனும் வண்டு வரவழைக்கப் பன்முறை முன்னியதும் உண்டு. துப்பறி வீரசிங்கமே! என்னுடைய துயரை நீர் ஒழித்திடுவீர் என்பதற் கையமில்லை.''

“அம்மா சுலோசனா! அமைதியாக இரு. நான் ஜயகுமாரன் என்பதை ஒருவரும் இன்று அறிதலாகாது. நான் இன்று மாலை சென்னைக்குச் செல்லும் வரையில் நான் மதன கோபாலன் என்பது உன்னுடைய நினைவிலிருக்கட்டும். இனி யான் சில கேள்விகளைக் கேட்க விரும்புகின்றேன். அவைகளுக்கு ஏற்ற பதிலை நீ இறுத்தல் வேண்டும். உன்னுடைய தோழி சாரதா வண்டு வருவதன் முன்னர் யான் செல்லவேண்டும்.''

“ஜயகுமாரரே! எனக்குத் தெரிந்தவைகளையெல்லாம் நான் கூறுகின்றேன் கேளுங்கள்''

“சுலோசனா! அன்று நீயும் சாரதாவும் மோகனசுந்தரமும் இருப்புப் பெட்டியுள்ள அறையில் வாளையும் மாலையையும் பார்த்துக்கொண்டிருந்தது உன்னுடைய நினைவிலிருக்கின்றதா.''

“ஆம் இருக்கின்றது''

“இறுதியில் அப்பெட்டியின் சாவியை சந்திரசேகரப் பிரபுவினிடத்தில் மோகனசுந்தரம் அளித்திடும் போது இருப்புப்பெட்டிப் பூட்டப்பட்டதா?''

“ஜயகுமாரரே! உம்முடைய கேள்வி எனக்குப் பெரும் வியப்பையே யளிக்கின்றது. அம்மாலையையும் வாளையும் இருப்புப்பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டே அவர் சாவியைத் தந்தையினிடம் அளித்துவிட்டு எங்களுடன் வந்தார்.''

“அம்மா! தொழின் முறையில் நான் கேட்கும் சில கேள்விகள் உனக்குச் சிறிது துயரையளித்திடும் எனினும் நீயதனைப் பொருட் செய்யாது பதிலிறுத்தல் வேண்டும். இருப்புப் பெட்டியைப் பூட்டியதார்?''

“மோகன சுந்தரப் பிரபுதான்.''

“அது சரியாகப் பூட்டப்பட்டதா?''

"ஜயகுமாரரே! நானே அதனைச் சோதித்துப் பார்த்தேன். அது சரியாகப் பூட்டப்பட்டே யிருந்தது."

"சுலோசனா! மோகனசுந்தரம் சாவியை உம்முடைய தந்தையினிடம் அளித்து விட்டு உன்னுடன் வந்து விட்டாரோ?

"ஆம்"

"அன்று மோகனசுந்தரத்தைக்காண எவரேனும் வந்திருந்தார்களோ?"

"இல்லை ; ஒருவருமில்லை."

"அன்றிரவு நீ அவரை எத்தனை மணிக்குப் பார்த்தாய்?"

"நாங்கள் அனைவரும் சுமார் பத்து மணிவரையில் பேசிக்கொண்டிருந்து விட்டுப் பின்னர் உறங்கச் சென்றோம்."

"மோகன சுந்தரம்நேராகத் தன்னுடைய அறைக்குச் சென்றாரோ?"

"ஆம்"

"மறுநாட் காலையில் அவருடைய அறை பூட்டப்பட்டே இருந்ததோ?"

"ஆம் வெளியில் பூட்டப்பட்டிருந்தது"

"அவர் எங்குச் சென்றார் என நீயறியா யன்றோ?"

"ஆ! ஜயகுமாரரே அதனை நீர் தான் அறிந்து அவரையெனக் களித்தல் வேண்டும். அவருக்கு என்ன தீங்கு நேரிட்டதோ"

"அம்மா அவருக்கு ஒருதீங்கும்வந்திராது ; வருத்தமுறாதே. சண்முக சுந்தரப் பிரபு சென்ற ஓராண்டாக இருப்பிடந் தெரியாது மறைந்திருக்கின்றார் அல்லவா?"

"ஆம்".

"அவர் எப்படிப்பட்டவர்?"

"ஜயகுமாரரே! என்னுடைய அண்ணாவைப்பற்றி எண்ணும்போ தெல்லாம் என்மனம் புழுங்குகின்றது. தெய்வ பக்தியும், ஒழுக்க நீர்மையும், கல்வியறிவும் நிறைந்த அவர் தூர்த்தருடன் கூடினரெனத் தந்தை அவரைக் கடிந்தமையைத் தாளவியலாது அவர் அன்றிரவு மறைந்தார். அவரைக் கண்டு பிடிக்கத் தந்தை எடுத்த முயற்சிகளெல்லாம் அவலமாயின".

"சுலோசனா! அவருடைய குணம் எத்தகையது?"

"நற்குணக் குன்றென்றே யான் கூறுவேன். அவர் தீய ஒழுக்கம் பூண்டாரெனத் தந்தை ஓர் அநாமதேயக் கடிதத்தால் கண்டறிந்தா ரென்பது ஒரு வகையில் உண்மை யெனினும், இதில் ஏதோ சூதிருக்கின்ற தென்றே யான் எண்ணுகின்றேன்".

"அம்மா! அவர் சென்ற அன்றிரவு யாரிடத்திலேனும் யாதாயினும் கூறிச் சென்றாரோ?"

"ஜயகுமாரரே! தந்தையும் அறியா ஒருண்மையை யான் உமக்கு இதுகாலை கூறுகின்றேன். என்னுடைய உயிர்த் தோழியாகிய சாரதாவும் சண்முக சுந்தரப் பிரபுவும் ஒருவரையொருவர் காதலித்து வந்தனர். இந்த உண்மையை யான் ஒருத்தியே உணருவேன். அன்றிரவு அவளுக்கு ஒரு கடிதத்தை வரைந்து அவளுடைய அறையுள் எறிந்துவிட்டு அவர் மறைந்தார்."

"சுலோசனா! அக்கடிதத்தில் என்ன வரையப்பட்டிருந்தது."

"பொதுவாகத் தான் குற்றமற்றவர் எனவும், தான் தன்னுயிரினும் உயிராகக் கருதுஞ் சாரதாவை எவ்வகையாலும் போந்து மணப்பதாகவும் அதில் வரையப்பட் டிருந்ததெனச் சாரதா இயம்பினள்".

"நீ அக்கடிதத்தைப் பார்க்கவில்லையா?

"இல்லை. அதை ஒருவரிடமுங் காட்டலாகாதென அதில் வரையப்பட்டிருந்ததாகச் சாரதா கூறினள்."

"சுலோசனா! அக்கடிதம் இதுகாலை சாராதாம்பாளிடத்தில் தானே இருக்கிறது."

"ஆம்."

"அம்மா சந்திர சேகரப் பிரபு இக்கடித விஷயத்தை யறியாரல்லவா?

"அறியார்"

"சுலோசனு! மோகனசுந்தரர் மறைந்ததிலிருந்து உனக்கொரு கடிதமும் வரவில்லையே"

"இல்லை"

"சண்முக சுந்தரர் சென்று ஓராண்டிற்கிடையில் சாரதாவுக் கேனும் கடிதம் வரைந்திருக்கிறாரோ"

"இல்லை".

"இல்லையென உறுதியாக நீ கூற ஒல்லுமா?"

"எனக்கும் சாரதாவுக்கும் இடையில் இரகசியங் கிடையாது. அவ்வாறு ஒருகடிதம் வந்திருப்பின் அதனை அவள் எனக்குக் காட்டாதிராள்"

"காட்ட வேண்டாமெனச் சண்முக சுந்தரர் கட்டளையிட்டிருப்பின் சாரதா உன்னிடம் காட்டாமல் மறைப்பதற்கிடமிருக்கின்றதன்றோ?"

"ஆம். ஆனால்...."

"சுலோசனு! நேரமாகின்றது. நான் செல்ல வேண்டும். நாம் இதுகாறும் பேசியவைகளை ஒருவரும் அறியலாகாது. நான் சென்னைக்குச் செல்லும் வரையில் மதனகோபாலனை என் பதை நீ மறந்தலாகாது. கவலையற்றிரு. சில தினங்களில் நீ உன்னுடைய காதலனை மீண்டும் பெறுவது திண்ணம். ஆண்டவன் அருள்புரிக."

"ஜயகுமாரரே! உம்மையறிந்தவுடன் என்னுயகம் வாடி விட்டது. இறைவன் அருளால் நீர் என்னுடைய கொடுந்துயரைப் போக்குவது திண்ணம்."

உடல் நுட்பம்

[ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்]

II

அ. உணவுறுப்புகள்

ஆவிரதம் (Engine) கரி, நீர் உண்டு, கனலுயிர் பெற்று, இயங்கி, சாம்பலை வெளியேற்றி, வேலைக்குத் தக்கபடி மீண்டும் உண்கிறது. அது போலவே இந்த உடல் யந்திரமும் உண்டுமிழ்ந்து அனல் பெருகி வாழ்கிறது. காற்று, கதிர், நீர், செடி வகை முதலியன மனித உணவு. குருதியைப் புதுப்பித்து, ஆற்றலை (Energy) வளர்த்து, உயிர்க்கனலைப் பெருக்கவே உணவுகொள்கிறோம். உள்ளேயுள்ள ஒரு கனல் "கொண்டா உணவு" என்னும். அப்போது உண்பது அமுதமாகும். கனலுக்காகவே, கனல் அழைக்கவே உண்கிறோம். கனலில்லா உணவு நஞ்சாகும். உணவுப் பொறியைப் பார்ப்போம்.

(1) நாக்கில் சுத்தமான எச்சில் ஊறுகிறது; அப்போது தூய உணவை (சுசி ருசியாய்) உட்கொள்ளுகிறோம். உணவைத் தோசைமா அரைப்பது போல நாக்கு தள்ளிக் கொடுக்கப் பற்கள் அரைத்துக் கூழாக்கி எச்சிலுடன் நன்கு கலந்து உணவுக்குழல் (Gullet) வழியாக இரைப்பைக்கு அனுப்புகிறது. உணவிலுள்ள சூட்டுப்பொருள், எச்சிலிற் கரைந்தே இனிப்புப் பண்டமாகிறது. எச்சில் அமுதம். அது கலவாத உணவு செரியாது. வாயில் உணவை நன்கு மெல்லுவது உணவைக் காற்பங்கு செரிக்கச் செய்வதாகும். அதை ப்ளெச்சர் (Fletcher) என்பார் Head-digestion என்கிறார். தாடையில் ஆறு, நாக்கின் கீழ்ப் பல எச்சிலூற்றுகள் உள்ளன. எச்சிலை எவ்வகையிலும் விணுக்கக்கூடாது. புகையிலை போடுவோரும், நீண்ட நேரம் குச்சி போட்டுப் பல்விளக்குவோரும் எச்சிலாகிய உமிழ்நீரை வீணாக்குகின்றனர். இது தவறு.

உணவுக் குழல் 9 அங்-நீளமுள்ளது; வட்டமான தசை யடுக்குகள் அமைந்தது. இதற்கு முன்னே, காற்றுக்குழல் இருக்கிறது. உணவு காற்றுக்குழலில் தவறிப் புகாமல் உள்நாக்கு (Epiglottis) உண்ணும்போதெல்லாம் காற்றுக் குழலை மூடிக் கொள்ளுகிறது. ஒரு பருக்கை தவறிக் காற்றுக் குழலிற் புகுந்தால் புரையேறுகிறது; அப்போது தலையில் தட்டிக்கனைத்தால் அப்பருக்கை மீண்டும் உணவுக் குழலுட்புகும்.

இரைப்பை ஒரு செம்பு நீர் பிடிக்கவல்லது. அது வயிற்றின் இடது புறம் இடைச்சவ்விற்குக் கீழ் (Diaphragm) உள்ளது. இது நான்கு படைகளாக அமைந்துள்ளது. முதல் இரண்டும் தசையும், தசை நாம்புகளும்; மூன்றாவது நாடி, நாளம், நரம்புகள்; நான்காவதில் ஆறு சிறு குழல்கள் வழியே தீவன நீர் (Gastric juice) பொசிந்து, மென்ற உணவைப் பாகாக்கி அதிலுள்ள தசைப் பொருளைச் (Proteid) செரிக்கிறது. (இத்தசைப் பொருள் பால், கோதுமை, உளுந்து, கடலையில் மிகுதி). இரைப்பையில் உணவு நான்கு மணி நேரம் தங்குகிறது. உண்டு $1\frac{1}{2}$ மணி நேரம் மூளைக்கும், உடலுக்கும் அமைதி கொடுக்க வேண்டும்.

இரைப்பைக்கு அடுத்தது துணை இரைப்பை (Duodenum). இரண்டிற்கும் நடுவே ஓர் இணைப்பு (Volve) உள்ளது. நான்கு மணிக் கொருதரமே அது திறந்து உணவுக் கூழை ஏற்கும். உணவுக் கூழ் (Chyme) துணையிரைப்பையில் பித்த நீர் (Bile), கணை நீர் (Pancreas) இரண்டுடனும் கலந்து கொழுப்பும், சூட்டுப் பண்டமும் கரைந்து, எச்சிலைப் போன்று உணவுச் சாறாகி (Chyle) சிறு குடலிற் புகும். [பித்த நீர், ஈரலில் (Liver) ஊறும். ஈரல் நான்கு இராத்தல் கனமுள்ளதாய் இரைப்பைக்கு வலது புறமுள்ளது. பித்த நீர் மஞ்சளாகப் பித்தக் குழாய் வழியே (Bileduct) துணையிரைப்பைக்குட் பொசியும். கணைநீர் (Pancreas) கணையத்தில் (Pancreatic glands) உண்டாகிறது. இது இரைப்பைக்குப் பின்னால் உள்ளது.]

சிறுகுடல் சுமார் 20 அடி நீளமும் $1\frac{1}{4}$ அங்குலம் குறுக்கும் உள்ளது. இதில் குடல்நீர் (Intestinal Juice) மீண்டும் உணவைக் கரைத்து அன்னஸார மாக்குகிறது. குடலின் உட்பக்கம் வெல்வெட்டுப்பட்டுப் போன்றது. அதை நொடியால் சிறுசிறு முளைகள் போன்று உணரலாம். இவற்றிற்குக் குடல்மணி (Villis) என்று பெயர். ஒவ்வொரு குடல்மணியும் பின்னற்குழாய்கள் (Lacteals) கொண்டன. இவையே அன்னஸாரத்தை உறிஞ்சி, அன்னஸாரக் குழாயில் (Thoracic duct) நிரப்புகிறது. இக்குழாயே உணவுச்சத்தைப் பெரிய நாளத்தின் வழியே (Sub - clavian Vein) குருதிப் பொறிக்குள் (Heart) செலுத்துகிறது; குருதிப் பொறிக்குள்ளே சுழன்று நுரையீரலுக்குச் சென்று அங்கு உயிர்க்காற்றின் வலிவால் செந்நீராகி (Blood) நாடிகள் மூலம் உடலெல்லாம் பாவுகிறது. உணவு இரத்தமாவதற்கு இத்தனை யந்திரங்கள் இவ்வளவு வேலை செய்கின்றன!

பெருகுடல் (Major Intestines) சுமார் 6 அடி நீளமும் 2 அல்லது 3 அங்குல அகலமும் உள்ளது. இது வயிற்றின் வலப்புறம் தொடங்கி, மேலே சென்று, இரைப்பையினடியிற் கீழிறங்கி, கடைக் குழாயில் (Rectum) முடிகிறது. இதன் வழியே கழிவு, கழிவுக் குழாய்க்கு (Bowels) வந்து வெளியேறுகிறது.

ஒருவனுக்கு ஒரு நாளைக்குச் சுமார் ஒரு விசை யுணவுபோதும். சுமார் 100 ராத்தல் நிறையுள்ளவன் தண்ணீர் நிறையை விலக்கி ஒரு ராத்தல் சாப்பிட்டால் போதும். இதில் ஓர் அவுன்ஸ் தசைப்பண்டம் (Proteid), 12 அவுன்ஸ் கறிப்பண்டம் (Carbohydrate), 3/4 அவுன்ஸ் கொழுப்பு, 3/4 அவுன்ஸ் உப்பு இருக்கவேண்டும். வயதாக வயதாக

உணவு குறையும். சிறு குழந்தைகள் தங்கள் நிறையில் 1/25 உண்கின்றன. 25 வயதுள்ளவன் தனது நிறையில் 1/100 தான் உண்கிறான். கனிகள் கோதுமை, காய்கறிகள், கடலை, தயிர் முதலியன திறனளிக்கும் உணவுகளாகும். உழைப்பிற்கேற்ப உணவுறக்கம் அமையும். மிகைக்குறைகள் மெலிவுறுத்தும். உணவுக்குடலின் மாசினைப் போக்குவது பட்டினியே.

௯. குருதி

இதயம் குருதிப்பொறி. அது தாமரை மொட்டுப்போல் கீழ்முகமாக இடது வாக்கில் காற்றுப்பையினிடையே தொங்கிக் கொண்டிருக்கிறது. அது ஒவ்வொருவர் கைப்பிடியளவாகும். இது, இதயச்சவ்வால் (Pericardinum) மூடப்பட்டு, நிமிஷத்திற்கு 70 தடவை "டக் டக்" என்று அடிக்கும். அது குருதிபாயும்போது இதயப்பைகள் சுருங்கி விரியும் துடிப்பே. இதயம் மேல் கீழாக நான்கு அறைகள் கொண்டது. [மேல் அறைகள் Auricles. கீழ் அறைகள் Ventricles] மேலும் வலம் இடமாக இதயம் இரு பிரிவுள்ளது. பெரிய நாளங்கள் (Vena cava) உணவுநீரை இதயத்தின் வலது மேல் அறையில் (Right Auricle) கொட்டுகிறது. அது கீழ் அறையின் வழியே நுரையீரற் குழாயில் (Pulmonary Artery) பாய்கிறது. அங்கு ஒவ்வொரு சிறு சிறு காற்றுப் பைகளிலுள்ள உயிர்க்காற்றால் தூய்மையுற்று மீண்டும் இதயத்தின் இடது அறைகளின் வழியே பெருநாடியில் (Aorta) பாய்கின்றது. பெருநாடி கிளை விரித்து குருதியை எங்கும் பரப்புகிறது. மூளை, இரைப்பை, குடல்கள், கணையம், மண்ணீரல் எங்கும்பரவித் திட்பவெப்பமளித்து இறுதியில் செந்நிறம் மாறி நுண்ணிய மயிரிழைக் குழாய்கள் (Capillaries) மூலம் நாளத்திற் கலந்து மீண்டும் தூய்மைபெற இதயத்திற்கு வரும். இரத்தத்திலுள்ள நச்சுப் பொருள்கள் சிறுநீராக வெளியேறும். சிறுநீர்க்காய்கள் (Kidneys) பாடவரைக்காய்போல 4''×2'' அளவில் உள்ளது. இதுவே சிறுநீரைப் பிரிப்பது. இரத்தக் கழிவு வேர்வையாகவும் வெளியேறுகின்றது. மிடற்றுநாடி (Carstid Artery) வழியாக இரத்தம் தலையிற் கிளை பிரிந்து பாய்கிறது. நாடிகள் இதயத்தினின்று இரத்தத்தை உடலிற் பரப்பும். இவற்றின் குழலில் தடித்த தசைகள் உள்ளன; இவை எலும்பையொட்டி ஆழத்திலுள்ளவை; இவற்றில் குருதி சிவந்து உயிர்க்காற்று நிரம்பியிருக்கும். இவற்றிற் சிறிது காயம்பட்டால் இரத்தம் பீச்சியடித்து அபாயம் நேரிடும். நாளங்கள் உடலினின்று இதயத்திற்கு உணவுச் சத்தையும், குருதிக் கழிவையுங் கொண்டுசேர்க்கும். இவைமெல்லிதாய்த் தோலுக் கருகில் உள்ளன. இவற்றில் இரத்தம் மங்கல் நிறமாக உயிர்க்காற்றில்லாதிருக்கும். இவற்றிற் பட்ட காயத்தை எளிதில் ஆற்றலாம்.

நமது குருதியின் நிறை சுமார் 12 பவுண்டு அல்லது 156பலம் இருக்கும். இயல்பில் இரத்தம் நிறமற்றுநீர்ப்பாங்கானது; இவற்றில் உயிர்க்காற்றுகள் நிறைந்த செங்குருதிக் கட்டிகள் (Red Corpuscles) மிதக்கின்றன. இவை ஒருசதுர அங்குலத்திற்குப் பல்லாயிரம் உள்ளன. ஒவ்வொன்றும் 1/3000 '' × 1/12000. '' அளவுள்ளது. இவற்றோடு வெண்குருதிக் கட்டிகளும் (White Corpuscles) மிதக்கின்றன. இவை குருதியிலுள்ள மாசை நீக்கும். இவையே இந்திரியமாகின்றன. இவற்றால் உடல் திண்மையுறும். கந்தகம் (Sulphur), ஒளிக்கட்டி (Phosphorous), இரும்பு, சோடியம் உப்பு, பொட்டிஷ்யம் (Potassium), சுண்ணம் (Calcuim), க்ளோரைன் (Chlorine), மந்தவாயு, (Nitrogen) கரிவாயு, நீர்க்காற்று எல்லாம் இரத்தத்திற் கலந்துள்ளன. இரத்தசுத்தி செய்வது உயிர்க்காற்று. ஆதலின் நல்லுணவும், நற்காற்றும், நன்னீரும் நல்ல இரத்தத்திற்கு வேண்டும்.

௧௦. உயிரி (Lungs)

நமது உயிரி (Lungs) தேனடை போன்றது. அதன் அறைகளைத் துணி போலப் பரப்பினால் சுமார் 100 சதுர அடிகள் இருக்கும். குரல்வளை, காற் குழல், காற்றுமைப்பைகள் இவையே இதன் உறுப்புகள். காற்றுக் குழல் சுமார் 4 அங்-நீளமுள்ளது. இது தடித்த வளையல்களால் ஆனது. பாகுபோன்ற தொண்டைத் தண்ணீர் (Mucus Phlegm) இதிலுள்ள சவ்வை (Mucus Membrane)மூடிக்கொண்டிருக்கிறது. இந்நீர் வற்றினால் தொண்டை கட்டிப் போகும். காற்றை வடிக்கட்டி உள்ளே யனுப்பஇதில் நுண்ணிய நூலிழைகள் (Cilia) உள்ளன. குரல்வளை அல்லது தொண்டைக்குழி (Larynx) மூன்று விளிம்புள்ளதாய் அடிநா வெலும்புடன் பொருத்தப்பட்டுள்ளது. அதன் வட்ட மான அடிப்பக்கம் காற்றுக் குழலோடு பொருத்தப் பட்டுள்ளது. இத்தொண் டைக்குழியில் நான்கு சவ்வுகளுள் ளன. இவற்றிற்குக் குரல் நாண்கள் (Vocal Cords) என்று பெயர். காற் றுப் பையினின்று, காற்று இத்தொண் டைக் குழியில் மோதிக் குரல்நாண்களை அசைப்பதால் ஒலி பிறக்கிறது. இவ் வொலித்திரள் நா, பல், உதடு, அண் ணங்களின் இணக்கத்தால் எழுத்தாக உச்சரித்து, சொல்லாக விரிகிறது. காற் றுக்குழல் இருகிளையாகி இடது, வலது சுவாசப்பைகள் அல்லது உயிரிகளுடன் இணைகிறது. உயிரிக்கிளைகள் (Bronchus) பலபல நுண்ணிய கிளைகளாக விரிகின்றன. ஒவ்வொரு கிளை நுனியி லும் திராக்ஷப்பழம் போன்ற காற் றுப்பை (Air Sac) உள்ளது. ஒவ் வொரு பையிலும் சுமார் 1700 காற்ற றைகள் (Air Cells) உள்ளன. இவையே காற்றைத் தூய்மைப் படுத் திக் கழிவைக் கரிக் காற்றாக வெளி யேற்றுகின்றன.

எப்போதும் மூக்கினால் அளவுப்படி மூச்சுவிட வேண்டும். வினாடிக்குக் குழைந்தைகள் 40 தடவையும், முதி யோர் 18 தடவையும் மூச்சு விடுகின் றனர். ஒருநாளில் 375 கனஅடியுள்ள காற்றை உட் கொள்ளுகிறோம். காற்றை உறுஞ்சும்போது இடைச் சவ்வு (Diaphragm) மேலே எக்கு கின்றது. விடும்போது தணிகின்றது. மூச்சை அதிகமாக வெளியிடாது காக்க வேண்டும். பேச்சு, நடப்பு, சண்டை, துயரம், ஓட்டம், புணர்ச்சியால் முறை யே 4, 8, 12, 18, 27, 40 மூச்சுகள் வீணாகின்றன. தீய காற்று, தீய உண வைப்போன்றே தீமை செய்யும். காற் றோட்டமாக வசித்தல் உடல் நலத்தின் முதல் தேவையாகும்.

௧௧. மூளையும் நரம்புகளும்

இதுகாறும் சொன்ன உறுப்புகளை எவ்வனவும், எல்லாவற்றையும் அறி வித்து அடக்கியாள்வனவும், நரம்புகள். ஆவிரதத்திற்கு நீராவி போன்றது நமக்கு நரம்பு. உணர்வு, அறிவு, நினைவு, சுவை, ஊறு, நாற்றம், காட்சி, கேள்வி, ஆட்டம், பாட்டம், எல்லாம் நரம்பு களின் செயலே. நரம்புக்களிற்றால், மனிதப்பாவை ஆடுகிறது. ஆட்டுவது மூளை. நரம்புகள் ஒரு தந்திச் சாலை போன்றன.

நரம்புகள் இருவகை (1) அறிவிக்கும் நரம்புகள் (Motor Nerves). இவை மூளை யறிவிப்பதை உடல் உணரச் செய்யும். (2) அறியும் நரம்புகள் (Sensory Nerves) நமக்கு அறி விப்பதும், மூளைக்குத் தெரிவிப்பதும் இவற்றின் செயல்.

இ டி யே று

"ஞாயிறு"

"ஞாயிறு" என்னும் பெயரால் ஒரு தமிழ்த்தாள் ஈழத்தினின்றும் எழுதல் கேட்டு மகிழ்வெய்துகிறேன். தற்காலத் தமிழ் அகத்துக்கு "ஞாயிறு" வேண்டற்பாலதே. பல கலைக் கதிர்களுடன் ஈழத்தமிழ் ஆழியினின்றும் தோன்றும் "ஞாயிறு" உலக முவப்பப் பலர் புகழ்வதாகும் என்பதில் ஐயமில்லை. ஈழ "ஞாயிறு" தமிழ்த் தாயின் இருளைக் கடிவதாக. தமிழ் "ஞாயிற்"றின் ஒளி தமிழ் நிலையந்தோறும் காலுமாறு தமிழ் உலகம் முயல்வதாக. "ஞாயிறு" வாழ்க. தமிழ்த் தெய்வத்தின் திருவருள் ஓங்க.

திரு. வி. க.

பெரியார் பிரிவு

திவான் பகதூர் கேசவப் பிள்ளை அவர்கள் இவ்வுலக வாழ்வு நீத்து விண்ணுல கெய்தியமை குறித்து வருந்துகிறோம். ஸ்ரீமான் கேசவப் பிள்ளையவர்கள் ஏழையாகப் பிறந்து, ஏழையாக வளர்ந்து, ஏழைகளின் பிரதிநிதியாக நின்று, ஏழைமக்கட் குழைத்து, ஏழை பங்காளன் திருவடி சேர்ந்தார். அவர், ஸ்தல ஸ்தாபனங்களிலும், 'சட்டசபையிலும் உழைத்த உழைப்புகள் யாவும் நேரிய முறையில் ஏழை மக்கட்குப் பயன்பட்டு வருதல் கண்கூடு. அவர்தந் தொண்டுகளில் சிறப்பாகக் குறிக்கத் தக்கன மூன்று. அவை, காட்டுச் சீர்திருத்தம், சிறைச் சீர்திருத்தம், தொழிலாளரியக்கத் தோற்றம் என்பன. பேர், புகழ் விரும்பாது பாடுபட்டவருள் ஸ்ரீமான் கேசவப் பிள்ளை அவர்களும் ஒருவர். அவர் பழைய காங்கிரஸ் வாதி; சிறந்த தேசபக்தர்; சீர்திருத்தக்காரர்; வகுப்பு வாதத்தை வெறுப்பவர்; பரந்த நோக்குடையவர்; தெய்வபக்தர்; "உயிர்கள் தொண்டே கடவுள் தொண்டு" என்னுங் கொள்கையுடையவர். ஸ்ரீமான் கேசவப் பிள்ளை அவர்கள் தென்னாட்டில் ஒரு பெரும் மணி விளக்காயிலங்கியவர். அவர்தம் பிரிவால் நாட்டுக்குப் பெரு நஷ்டமே விளைந்துவிட்டது. அப்பெரியார் நல்லுயிர் இறைவன் ஒளியில் தங்கி அமைதி பெறுவதாக.

மிதவாதிகள்

மிதவாதிகள் தந்திரத்தில் சமர்த்தர்கள் என்பது உலகறிந்த தொன்று. மிதவாதிகள் இப்பொழுது வெள்ளைக் காகிதத்தைக் குறை கூறியவண்ணமாயிருக்கிறார்கள். குறை கூறி இவர்கள் என் செய்யப்போகிறார்கள்? வெள்ளைக் காகிதம் இங்கிலையில் வெளிவந்தமைக்குக் காரணர்கள் மிதவாதிகளே யாவார்கள். இவர்களிடத்தில் பிரிட்டிஷ் இராஜ தந்திரிகட்கு நம்பிக்கையுண்டு. மிதவாதிகள் வெள்ளைக் காகிதத்தைக் குறை கூறிக்கொண்டே தேசத்தைத் தங்கள் வழிப்படுத்த முயன்று வருகிறார்கள். இவர்கள் சூழ்ச்சியை உணர்ந்து, காங்கரஸ்காரர்கள் ஒத்துழையாமையை விடுத்து, ஒத்துழைப்பில் தலைப்பட்டுச் சட்டசபைகளைப் பற்ற முயல்வார்களாக. வகுப்புவாதம் ஒடுங்கும்வரை ஒத்துழையாமை வெற்றிபெறா தென்பது பலவழியாலும் உள்ளங்கைநெல்லிக் கனிபோல் விளங்குகிறது. வகுப்பு வாதம் முதலிய குறைபாடுகளைப் போக்குவதில் தேசபக்தர்கள் நாட்டஞ் செலுத்தல் வேண்டும். இதற்குச் சட்டசபைத் துணை இன்றியமையாதது. அச் சட்டசபையை மிதவாதிகள் பற்றிக் கொண்டால் வகுப்பு வாதம் வலுத்துக்கொண்டே போகும். ஆகவே காங்கரஸ்காரர்கள் சட்ட சபைகளைப் பற்றி, ஒத்துழைப்பால் நாட்டுக்கு நலஞ் செய்ய முந்துவார்களாக.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

	ரூ.	அ.
ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது) ...	5	0
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) ...	0	8
ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் ...	1	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி ...	1	6
குருதேவர் வாக்கியம்	0	5
நமது தாய்நாடு	0	8
பக்தியோகம்	0	10
கர்மயோகம்	0	12
சிகாகோ பிரசங்கம்	0	5
விவேகானந்தரின் கடிதங்கள் ...	0	8
எனது போர் முறை	0	2
பவாஹாரி பாபா	0	3
ஜகஜ்ஜீவபர விளக்க வினாவிடை ...	0	13
பக்தி மார்க்கம்	0	2
முத்திநெறி	0	5
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0	2

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை.

கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,

பெண் ணுரிமை வேண்டுமா,

தீண்டாமை யொழிதல் வேண்டுமா,

சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,

இயற்கை யின்பம் வேண்டுமா,

வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா?

வேண்டுமானால்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

	ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	2	0
தமிழ்த் தென்றல்	2	0
முருகன் அல்லது அழகு	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	2	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே	0	8
சைவத்தின் சமரசம்	0	8
சைவத்திறவு	0	8
கடவுள் காட்சியும் தாயுமானாரும்	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து	0	8
நாயன்மார்	0	3
சைவ சமய சாரம்	0	1
இமயமலை அல்லது தியானம்	0	6
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்....	0	4
முருகன் அருள் வேட்டல்	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற்செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி.பி.-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான்
த சண்முகக் கவிராயரின்

மகாபாரதம் தமிழ் வசனம்

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பயின்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரண்ய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

வரப்பிரசாதம்

தேக அசதி, மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, நபும்ஸத்வம் முதலிய வியாதிகளைப் போக்குவதில் எங்கள்,

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

வரப்பிரசாதம் போன்றவை. மேலும் தேகத்தை வஜ்ர சரீரமாகச் செய்யும். 32 மாத்ரைகளடங்கிய டப்பி 1 க்கு ரூபா 1. 5 டப்பிகள் ரூபா 4.

இனம்! கேட்லாக் இனம்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கெர்ப்ப எண்ணெய்

பெண்களுக்குண்டான பொறுக்கமுடியாத வயிற்று வலியையும், சூதக சம்பந்தமான கெடுதல்களையும் நீக்கி சந்தான விருத்தியைக் கொடுக்கும். ஒருமுறை பரீட்சியுங்கள். அநுபவத்தில் கைகண்டது.

புட்டி ஒன்றுக்கு ரூபா 2.

ஏராளமான நற்சாட்சிகள பெற்றது

C. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை,
பழநி S. I.

ஆனந்தாதி ஆனந்த அட்சயாந்த

73-வருட பஞ்சாங்கம்

விலை ரூபா 7.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, நீரிழிவு, ஸ்திரீ சம்பந்தருன்மம் பெரும்பாடு எல்லாம் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

சே விசுவநாத செட்டியார்,
வைத்யம், வாலுகுடி, திருச்சி ஜில்லா.

இதோ! தாது புஷ்டி

மதனமஞ்சரி

இம் மாத்திரைகள் 35 வருஷங்களாய் உலகமெங்கும் புகழ் பெற்றவை. இது பலவீனம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி முதலிய வியாதிகளைப் போக்கி நல்ல ரத்த விருத்தியும் தாதுபுஷ்டியும் கொடுத்து இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும். 40 மாத்திரைகளடங்கிய டப்பி விலை ரூபா 1.

இனம்! வைத்திய வித்தியா இனம்!!

விபரம் வேண்டுவோர் இனமாய் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதன மஞ்சரி பார்மசி
1/94, சைனாபஜார், மதராஸ்.

ஏஜண்டு :—

M. S. மலீம், K. B. அண்டு கோ.
No. 14, டத்தோகிராமாட் ரோட்,
பினாங்கு.

T. D. மதுர நாயகர் அண்டு கோ.,
No. 211, செட்டித்தெரு, கொளும்பு.

ஆனந்த மெடிகல் ஹால்.
No. 165, செட்டித்தெரு, கொளும்பு.

நவசக்தி

பெரிய புராணம்

மூலமும்

அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகின்றன

ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம் !

சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ் மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராணமெங்கும் பத்திச் சுவை நனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக் கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரிய புராணம். கடவுள் அன்பு, ஆன்ம நேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல் நயம், பொருள் நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரிய புராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

இத்தகைய அரும்பெரு நூலின் மூலமும், "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதிய அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும், அன்பர்கள் எளிதில் வாங்கிப் பயன்பெறும் பொருட்டு மாதந்தோறும் சஞ்சிகை உருவில் வெளிப்படுத்தப் படுகின்றன.

ஓலைப் பிரதிகளைக்கொண்டு மூலம் ஒப்பு நோக்கப்படுகிறது. பொருந்திய பாடபேதங்கள் குறிக்கப்படுகின்றன. 25 ஆண்டுகளுக்குமுன் வெளிவந்த பதிப்புக்கும் இப்பதிப்புக்கும் பலதிற வேற்றுமைகளுண்டு. குறிப்புரை, பதவுரை போலத் துணைசெய்யும். இக்காலத்துக்கு இன்றியமையாத ஆராய்ச்சி விசேடங்களும் பொறிக்கப்படுகின்றன.

சுமார் 25 சஞ்சிகையில் புத்தகம் முடிவு பெறலாம். பின் விலை புத்தகம் ஒன்று 7 ரூபாய்க்கு மேலாகும்.

அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

சந்தா விவரம்

புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை ரூபா 5.
" " " வெளியூர்—தபால் செலவுடன் " 6.

மாதச் சஞ்சிகை ஒன்றன் விலை அணா 4—சென்னைக்குமட்டும்.

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

அரிய தமிழ் நூல்கள்

	ரூ.	அ.
கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்)....	3	0
முருகவேள் பனுவல் திரட்டு	1	0
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும்பத வுரையும் சரித்திரக் குறிப்பும்)	0	12
முருகன் திருவருட்பா	0	8
தேவி தோத்திர மஞ்சரி	0	4
குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்)	1	4
விநாயகர் பனுவல் திரட்டு	0	6
திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும்		
கிளேஸ்	0	5
ஷெடி ஈப்	0	3
சிவபுண்ணியத் தெளிவு	0	3
காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன்	0	6

திரு அருட்பா - பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு.

சுவாமிகள் கையெழுத்தைக்கொண்டு பிழை களையப்பட்ட சுத்த பாடமுள்ளது.
நூதன விஷயங்களும் ஆராய்ச்சிக் குறிப்புக்களும் நிறைந்தது.

6-வது தனிப்பாசுரப் பகுதி - அடக்கவிலை அணா 4.

(பல மத ஸ்தோத்திரங்கள் - கலியுகக் கோலம் - குடும்ப கோஷம்)

சாதன சதுட்டயம்

முத்திமார்க்கத்திற்குரிய அருமையான போதனைகள்

மஹாபாரதத்தில் கூறியிருக்கும் பீஷ்மாசாரியாருடைய பெரிய தகப்பனார் தேவாபி எனும் சீவன் முத்தர், இப்போது இமயமலையில் மாஸ்டர் குதாமி என்ற பெயருடன் வீற்றிருக்கின்றார். இம்மகரிஷி ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சிறு வயதில் கனிமொழிகளாகக் கொடுத்த உபதேச போதனைகளுக்கு ஸ்ரீமான் லெட்பீட்டர் அவர்களும் டாக்டர் அனிபெசன்ட் அம்மையாரும் செய்த வியாக்கியான உரைகள், ஆங்கிலத்தினின்று சாதாரண தமிழ் நடையில் மொழி பெயர்க்கப் பட்டு "சாதன சதுட்டயம்" என்ற பெயருடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்நூல் இல்லற வாழ்க்கையிலிருந்து கொண்டே நான்கு சாதனங்களைக் கையாள வேண்டிய முறையைக் காட்டுவதோடு தன்னைத் தான் அறியக்கூடிய விசார சாகரமாயு மிருக்கின்றது.

கிரௌன் பக்கம் 520 ; 29 அத்தியாயம் ; உயர்ந்த காகிதம். விலை ரூபா 3.

திவ்ய ஞான தீபம்

இது, பாழ்வெளி - விகாசமுறை - தேகங்கள் - புனர் ஜன்மவிதி - கர்மவிதி - மரணத்திற்குப்பின் - மார்க்கம் - தியானம் - ஞானசாதனம் - சீவன் முக்தர்கள் - குரு நாதனைக் காணும் வழி - சிஷ்யத்வப்படிகள் - ஞானபூமிகள் - மூர்த்த நிலைகள் - மாட்சி முதலிய பொருள்களைப்பற்றி எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட நூல். 330 - பக்கங்கள் கொண்டது. நல்ல பெதர்வெயிட் காகிதத்தில் அச்சிடப்பட்டது. விலை ரூபா 3.

திருவாசகம் மூலமும் உரையும் விலை ரூபா 3.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

Registered No. M. 1500. "NAVASAKTI"

ஜெகப் பிரசித்திபெற்ற

காமினியா சோப்புகள்

காமினியா ஒயிட்ரோஸ் சோப்



உண்மையாக இந்த உயர்ந்த சோப், அதனுடைய ரோஜா புஷ்பங்களின் வசீகரமான வாசனையால் உங்களை ஆச்சரியப்படும்படி செய்யும். 3 கட்டிகள் உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

காமினியா சந்தன சோப்

சந்தனக் கட்டையைப்போன்ற வாசனையையும், பலரும் விரும்பும் படியான வாசனையையும் கொடுக்கிறது. இது முரடான சருமத்திற்கு மிகவும் நன்மை பயக்கக் கூடியது. 3 கட்டியுள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

காமினியா லவெண்டர் சோப்

இச்சிறந்த சோப்புகள் உயர்ந்த சாமான்களால் சிறந்த முறையில் தயாரிக்கப்படுவன; மனோரம்மியமான வாசனை வீசுவன; தேகத்திற்கு அழகையும் மனதிற்கு மகிழ்ச்சியையும் அளிப்பன. அழகை விரும்புவோர்க்கு இது ஒரு வரப்பிரஸாதம் போன்றது. 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1.

டில்பகார் சோப்

சருமத்திற்கு வேண்டிய சகலவித முறைப்படி உள்ள வஸ்துக்கள் நிரம்பிய ஒரு மனோஹரமான சோப். இதன் அதியற்புத குணத்தை விஸ்தரிக்க முடியாது. இதனுடைய ஏராளமான புஷ்ப வாசனையால் ஸ்நான அறையை நந்தவனம்போல் செய்கிறது. இன்று மாத்திரம் இந்த உயர்ந்த டில்பகார் சோப்பைப் பரீக்ஷியுங்கள். 3 கட்டி உள்ள ஒரு பெட்டியின் விலை ரூபா 1

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

மதராஸ் டிஸ்டிரிப்யூட்டர்கள் :—

ஜெ. எஸ். சேட் & கோ,

நெ. 68, டைக்ராப்ட்ஸ் வீதி, திருவல்லிக்கேணி, சென்னை.

தயாரிப்பவர்கள் :—

The Anglo-Indian Drug & Chemical Co., Bombay, 2.

Edited & Published by T. V. Kalyanasundaran; Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Madras.